ஓ

# தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| | | |
|---|---|---|
| துணர் : ௩. | பிரபவ – வைகாசி, ஆனி. | மலர் : ௨, ௩. |


## இராசராசன் I.

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி 9-பக்கம்.)

### இளம்பருவமும் முடிசூட்டுதலும்.

சுந்தர சோழனாகிய இரண்டாம் பராந்தகனுக்கு இளைய மகனாகிய இவன் இன்ன யாண்டிற் பிறந்தவன் என்று தெரிதற்கிடமில்லை எனினும், தஞ்சை இராசராசேச்சரத்தும், திருவையாற்று ஒலோகமாதேவீச்சரத்தும், முறையே "உடையார் இராசராசதேவர் திருச்சதயத் திருவிழா" எனவும், "உடையார் திங்கள் சதயவிழா" எனவும், திங்கடோறும் கொண்டாடப் பட்டமையானும், செங்கற்பட்டிலுள்ள திருவடந்தை வராகப் பெருமாள் கோயிலில், யாண்டுதோறும் ஆவணித் திங்கள் சதய நாள்தொட்டு, "இராசராசன் திருவிழா" என எழுநாள் விழா எடுத்தமை G. O. No. 822. Public, 28 July 1911 பக்கம் 70 இல் அறியக்கிடத்தலானும், திருவடந்தையில், இவ்விழா, எனைத் திங்களில் நடைபெறாது ஆவணித் திங்களில் நடைபெற்ற

மையானும், ஆவணித் திங்கட் சதய நாளே இவன் பிறந்த நாளென்று உய்த்துணரலாம். கலிங்கத்துப்பரணியில், சோழ மரபின் தொடர் புரைக்கும் பகுதியில், "சதய நாள்விழா வுதியர் மண்டலந் தன்னில் வைத்தவன்" என இவனைச் சுட்டியிருத்தலின், இவன் பிறந்த நாள் விழாவைத் தான் முதன் முதலில் வென்றுகொண்ட சேர நாட்டில் ஏற்படுத்தினமை இனிது விளங்கும்.

இப் பிறந்த நாள் விழாவைப் "பெருமங்கலம்" எனத் தொல்காப்பியமும், "புண்ணிய நன்னாள்" என மணிமேகலையும் கூறும். அந்நாளில், அரசன், சிறைவிடுதலும், செருவொழிதலும், கொலை ஒழிதலும், இறை தவிர்தலும், வேண்டின கொடுத்தலுமாகிய சிறந்த தொழில்களை மேற்கொண்டு, வெள்ளணி அணிந்து எவ்வுயிர்க்கண்ணும் அருள் நிகழ இருப்பன். ஆதலின், அதனை "வெள்ளணி நாள்" எனவும் விளம்புப. அன்று, "கண்ணார் கதவந் திறமின் களிறொடு தேர்—பண்ணார் நடைப்புரவி பண்விடுமின்—நண்ணாதீர்—போர்வேந்தன் பூசலிலன்" எனவும், "ஏமாரு மன்னீர் எயில் திறமின்—காமநுகர்மின் கண்படுமின்" எனவும் ஏமமுரசம் எடுத்தியம்பும். இவற்றால், மன்னர் பிறந்த நாள்விழா தண்டமிழ் நாட்டில் தொன்று தொட்டு நடைபெற்று வந்தவாறறிக.

இனி, இவன் பிறந்தபோது, "தம் கணவற்கு இனி நிலச்சுமை குறைந்த தென்னும் மனமகிழ்ச்சியால் ஆதிசேடன் மனைவியர் நடித்தனர்" எனத் திருவாலங்காட்டுச் செப்பேடு (சுலோகம் 63) கூறுமாற்றால், நிலந்தாங்கும் நீண்முடி வேந்தர்க் குரியவாகிய அகன்ற நெற்றியும், உயர்ந்த தோளும், பரந்த மார்பும், முழந்தாளளவும் நீண்ட கையும் என் றின்னோ ரன்ன அரச அடையாளங்கள் பலவும் இவன் மேனியில் விளங்கிக் கிடந்தன போலும் என்று கருதலாம்.

ஆகவே பாராளும் பெருவேந்தர்க் குரிய தன்னமில் அடையாளங்கள் பலவும் தன்பால் வயங்க, நல்வாழ்வுறுங் காலம் நண்ணியதென நிலமகளும் வென்றிமகளும் நடித்திட, பகை

யிருளொடுங்க, இள ஞாயிறு போல ஆவணித் திங்களிற் சதய நாளிற் பிறந்த இவன், அருண்மொழித் தேவன் எனப் பெயரிடப் பெற்று வளர்ந்து, உரிய காலத்தில் நூல்கள் பலவும் நிரம்பக் கற்று, யானையேற்றம், குதிரையேற்றம், தேரேறுதல், வில்வாட் பயிறல் என் றின்னவைகளை நன்கு தேர்ந்து, சைவம் வளர்க்குந் தண்முகில், திருமுறை போற்றும் செவிலி, கற்றவர் தமக்கொரு நற்றுணை, இயலிசை படரும் கொழுகொம்பு என எவரும் எடுத்தியம்பிட, இளமையிலேயே மூதறிவிற் சிறந்திருந்தனன்.

இனி, இவனுக்கு மூத்தோனாகிய ஆதித்த கரிகாலன் இறந்த பின், இவனே அரியணை ஏறுதற்குப் பெரிதும் உரிமையுடையவனாகவிருந்தும், குடிகள் இவனையே அரசுரிமையைக் கைக்கொள்ளுமாறு வேண்டியும், தன் சிற்றப்பன் மதுராந்தகனுக்கு அரசாள் விருப்பம் ஒழியுமளவும் தனக்கு நாடாட்சி வேண்டியதில்லை என்று மறுத்து அவன்கீழ் இளவரசாக இருந்த இவனது தன்மையை நோக்குமிடத்து, இவன் தாயத்தார்க்குட் பகைமை கூடாதென்னும் நோக்கும், பெரியோர் கருத்திற்கு மாறுபடாது அடங்கி யொழுகும் பெற்றியும் வாய்ந்த பெருந்தகை என்பது விளங்கும். இன்னும் இவன் எடுப்பித்த இராசராசேச்சரத்திற்குத் தானும் பிறரும் தந்தனயாவையும் கல்லிற் றீட்டுதற்கு ஆணை தருபவன், "நாம் கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும், மற்றும் கொடுத்தார் கொடுத்தனவும் கல்லில்வெட்டுக" என்று திருவாய் மொழிஞ்சருள வெட்டியவற்றுள், தமக்கையாரைக் கூறுமிடத்தெல்லாம் "இராச ராசதேவர் திருத்தமக்கையார்" என மேம்படுத்துக் கூறியதோடமையாமல், அவர் தந்தன மட்டும் தன்னோடெடுத்து நடு விமானத்து வரைந்திடச் செய்து, பெண்டிரும் பிறரும் தந்தவற்றைத் திருச்சுற்று மாளிகையில் இடந்தொறும் இடந்தொறும் வெட்டுவித்திருப்பதை ஆராயின், இவன் தன் தமக்கைபால் கொண்டிருந்த நன்கு மதிப்பினை இனிதுணரலாம்.

இனி, இவனை அருண்மொழித் தேவன் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடு கூறுவதால், அது இவனது இயற்பெயர்

போலும். இவனுக்குரிய பட்டப்பெயர் இராசகேசரிவர்மன் என்பது. நெடுநாளாக உத்தமசோழன்கீழ் இளவரசாக இருந்து அரசகாரியங்களை நன்குணர்ந்த இவன், அவன் இறந்த பின்னர், ஆராய்ச்சியாளர் நுண்ணறிவாற்கண்ட கி. பி. 985 ஆம் யாண்டில் * இராசகேசரி என முடி சூட்டப்பட்டு அரசுகட்டி லேறினன்.

முடிசூட்டு விழா எடுக்குமிடத்து அவ்விழாவிற் கென்று குறித்த நன்னாளில், அரசனை யானைமீ தேற்றி மன்னரும் அமைச்சரும் பிறரும் புடையிற் சூழ்வரப் பல்லியங் கறங்க வாழ்த்தொலி பெருக நகர்வலஞ் செய்வித்துப் பின்னர்க் களிற்றினின்றும் இழிச்சி, முடிசூட்டு சாலையிற் கொடுபோய், நாற்புறமும் மாலைகள் நாலக், கொற்றக்குடை நிழற்ற, நடுவண் இட்ட அரியணைக்கண் ஏற்றி, முரசுமுழங்க முடிசூட்டி, மங்கலத் தீ வளர்த்து, நுண்ணூல் புறம்சூழ்ந்த பொன்னின் குடங்களில் நிரப்பிய நன்னீரை மரபுளியாட்டி விழாவயர்வர். இதனை மூர்த்திநாயனார் புராணத்துட் காண்க.

இனி, இவனுக்கு, ஒலோகமகாதேவியார், சோழமகாதேவியார், அபிமானவல்லியார், திரைலோக்கியமாதேவியார், பஞ்சவன் மாதேவியார், பிருதிவிமாதேவியார், இலாடமாதேவியார், மீனவன்மாதேவியார் என்கிற வேம்பன் சீருடையார் என மனைவியர் பலர் இருந்தமை அறியலாம். இன்னவரை மனைவியரெனத் தெரிந்து கோடற்கு அன்னவர் பெயர்க்கு முன்னர், "உடையார் சீராசராசதேவர் நம்பிராட்டியார்" என்னும் அடைமொழி புணர்க்கப்பட்டிருத்தலே தக்க சான்றாகும்.

* முற்காலத்தில் சோழர்மரபில் இராசகேசரி எனவும் பரகேசரி எனவும் அரசர் இருவர் இருந்தனர் என்பதை ஆனைமங்கலத்துச் செப்பேட்டிற் காணலாம். பிற்காலத்துச் சோழரெல்லோரும் பெருமையிற் சிறந்த அன்னவர் பெயரைத் தம் பெயர்க்கு முன்னர்ப் பட்டப்பெயராகச் சேர்த்து வழங்குவாராயினர். அவ்வாறு வழங்குமிடத்துத் தந்தை இராசகேசரியாயின் மகன் பரகேசரியாக இருப்பன். இவ்விருபெயரும் தம்மில் அடுத்தடுத்து வழங்குவதே, இன்னவனுக்குப் பின்னர்ப் பட்டம் எய்தியவன் இன்னவன் என்பதை இனிதுணர்த்தும். இம்முறையில் இராசராசன் இராசகேசரியானன்.

இனி, இம்மனைவியர் பலருள் பட்டத்தரசி இன்னுரென்றறிவதும் இன்றியமையா தாகலின், அதனை ஆராயின், ஒலோகமாதேவியாரே முதன்மனைவியாதல் அமையும். எவ்வாறெனிற் கூறுவேன்.

இராசராசன் ஆணையிட்டவாறு பொறிக்கப்பெற்றுள்ள மனைவியர் கல்வெட்டுக்களில், "உடையார் சீராசராசதேவர் நம்பிராட்டியார் ஒலோகமாதேவியார் சீராசராசீச்வரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத்தொன்பதாவதுவரை எழுந்தருளுவித்த செப்புத் திருமேனிகள்" என ஒலோகமாதேவி தந்தன கூறும் கல்வெட்டே முன்னர் வெட்டப்பெற்றுள்ளது.

அரசர்கள், தம் பட்டத்தரசியுடனிருந்தே நற்காரியங்களை இயற்றுவது இயற்கை. இவன், திருவிசலூர்க் கோயிலில் துலாபாரம் புக்கபோது தந்தி சத்தி விடங்கியார் இரணிய கருப்பம் புக்கனரென்பதை, "சீ கோவிராச கேசரி வன்மரான சீராசராச தேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவது இராசேந்திர சிங்க வளநாட்டு மண்ணிநாட்டு பிரம்மதேயம் வேம்பற்றூராகிய சோழமார்த்தாண்ட சதுர்வேதி மங்கலத்து மகா சபையோம் கையெழுத்து. நம்மையுடைய சக்கிரவர்த்தி உடையார் சீராசராச தேவர் இவ்வூர் திருவிசலூர் மகாதேவர் சீகோயிலிலே துலாபாரம் புக்கருளின அன்று நம்பிராட்டியார் தந்திசத்தி விடங்கியார் இரணியகருப்பம் புக்கருளி, இத் திருவிசலூர் மகாதேவர்க்கு அக்காரடலை அமுதுக்கு வேண்டும் நிபந்தங்களுக்காக வைச்ச காசு சாரும்அ" என்னும் கல்வெட்டா லறிக.

தந்தி சத்தி விடங்கியார் என்பது ஒலோகமாதேவியார்க்கே பெயரென்பதை, "உடையார் சீராசராசதேவர் நம்பிராட்டியார் தந்திசத்தி விடங்கியரான சீ ஒலோகமாதேவியார் வடகரை ராசேந்திர சிம்ம வளநாட்டுப் பொய்கை நாட்டுத் திருவையாற்றுப் பால் நாம் எடுப்பித்த திருக்கற்றளி ஒலோகமாதேவி ஈச்வரம்" என்னும் பகுதி நன்குணர்த்தும்.

இன்னும், ஆதித்தன் சூரியனன் தென்னவன் மூவேந்த வேளான் என்பவர், தஞ்சை இராசராசேச்சரத்தில், இராசராசன் படிமத்தோடு எனைய மனைவியர் படிமங்களை எழுந்தருளச் செய்யாது, ஒலோகமாதேவியார் படிமத்தையே எருந்தருளுவித்தமை, "உடையார் சீராசராசீச்வரம் உடையார்க்கு சீ காரியஞ் செய்கின்ற பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனுன தென்னவன் மூவேந்த வேளான் சீராசராசீச்வரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத்தொன்பதாவதுவரை எழுந்தருளுவித்த செப்புப் பிரதிமங்கள்.................பாதாதி கேசாந்தம் ஒரு முழமே நால் விரலரை உசரத்து இரண்டு திருக்கையுடையாராகக் கனமாக எழுந்தருளுவித்த பேரிய பெருமாள் (இராசராசன்) பிரதிமம் ஒன்று, இருபத்து இருவிரலே இரண்டு தோரை உசரத்து இரண்டு திருக்கையுடையாராகக் கனமாக எழுந்தருளுவித்த இவர் நம்பிராட்டியார் ஒலோகமாதேவியார் பிரதிமம் ஒன்று" என S. I. I. vol. II, Part II பக்கம் 155 இல் அறியக்கிடக்கின்றது.

ஆகவே, தந்தி சத்தி விடங்கியார் என்னும் ஒலோகமாதேவியாரே, இதுகாறும் கூறியவாற்றால், இராசராசன் முதற்பெருந்தேவி என விளங்கிநிற்றல் காண்க.

இவனுக்கு, இராசேந்திரன் என்ற மகனும், குந்தவை என்ற மகளும் இருந்தனர். இவர்களையன்றி மாதேவடிகள் எனப்பெயரியமகளும் உண்டென்பது, "சீராசராசதேவர் திருமகளார் மாதேவடிகளார் திருவையாற்று ஒலோகமாதேவீச்வர முடையார்க்கு ...............சாத்தியருளக் குடுத்த பட்டம் ஒன்று" என்னும் திருவையாற்று உத்தர கைலாயம் என வழங்கும் ஒலோகமாதேவீச்சர சாசனப்பகுதியால் விளங்கும். இம் மாதேவடிகளை நடுவிற் பெண்ணெனத் திருவலஞ்சுழிக் கல்வெட்டுக்கூறும். Ep. An. Rep. for 1902-3, No. 633 of 1902. ஆகவே, இராசராசனுக்கு இராசேந்திரன், மாதேவடிகள், குந்தவை என மக்கள் மூவர் இருந்தனரென்ப தறியக்கிடத்தல் காண்க.

## இராசராசன் படையெழுச்சியும் வெற்றி மேம்பாடும்.

இனி, இராசராசன் வெற்றிமேம்பாட்டிற்கு இன்றியமையாதது படையெழுச்சியாதலால் அதனை, நன்கறிவதற்கு ஏற்றவைகள் கிடைத்திலவேனும், அவற்றினை ஒருவாறு நாம் துணிவதற்குத் தக்க கருவியாயிருப்பன இன்னவன் சாசனத்தொடக்கத்திற் காணப்படும் மெய்க்கீர்த்திகளேயாம்.

இனி, மெய்க்கீர்த்தியாவது,

"சீர்நான் காகி யிரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புக ழெல்லாஞ் சொல்லியு
மந்தத் தவன்வா லாறு சொல்லியு
மவளுடன் வாழ்கெனச் சொல்லியு மற்றவ
னியற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறப்பட வுரைப்பது சீர்மெய்க் கீர்த்தி"

என்னும் பன்னிருபாட்டியல் விதிக்கிணங்க, நாற்சீர்கொண்ட இரண்டடித் தொடையில், தன் வெற்றிமேம்பாட்டால் விளைந்த மெய்ப்புகழெல்லாம் விளங்க, இராசகேசரிவர்மரான இராசராச தேவர்க்கு யாண்டெனச் சிறக்க வரைந்துள,

"திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வெங்கை நாடுங் கங்க பாடியுந்
தடிகை பாடியும் நுளம்ப பாடியுங்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்களர் ஈழமண் டலமும்
இரட்ட பாடி யேழரை யிலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீரா யிரமும்

திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
னெழில்வள ரூழியு ளெல்லா யாண்டுந்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோராச கேசரி வர்மரான
உடையார் சிராச ராச தேவர்க்கு யாண்டு" என்பது.

இம் மெய்க்கீர்த்திகள் இல்லாவிடில், வரலாற்றுராய்ச்சிக்குச் சாசனங்கள் பயன்படாதொழியும். இவனுக்கு முன்னிருந்தவர் சாசனங்களில் மெய்க்கீர்த்தி வரைந்து பின்னர்ச் சாசனந் தொடங்கும் வழக்குக் காணப்படாமையின், அதனை எற்படுத்தினவன் இவனேயாவன். அஃதும் இவன் ஆட்சியின் பதினான்காம் யாண்டுமுதற் காணப்படுதலின், மெய்க்கீர்த்தி எழுதும் வழக்கம் இவனது பதினான்காம் யாண்டு தொட்டு எற்பட்ட தெனக்கோடல் சால்புடைத்து.

இனி, இவன் சாசனங்களை ஆண்டுவாரியாக முறைப்படுத்து, அவற்றிலுள்ள மெய்க்கீர்த்திகளிற் சொல்லிப்போதரும் வென்று கொண்ட நாடுகளின் முறையே முறையாகவைத்து ஆராயுமிடத்து, இவன் அரியணை எறியபிறகு எற்பட்ட சாசனங்களில், எட்டு ஆண்டு அதாவது 994-ஆம் யாண்டுவரையிலும் எத்தகையவென்றியும் கூறப்படவில்லை. அதனால், ஊக்கம் பெரிதும் உடையனாகிய இவன் மடிந்திருந்தான் என்பதமையாது; பிறநாட்டின்மீது படையெடுத்தற்குப் போதிய அளவு படைகூட்டல், நாட்டிற்கு அரணமைத்தல், உள்நாட்டுக் குழப்பங்களை ஒழித்தல் என்றின்னவைகளில் காலங்கழித்திருந்தனன் எனக் கொள்வதே தக்கது.

இனி, தான் கருதிய கருவிகள் யாவும் கைவந்தவுடனே, மலைநாட்டின்மீது படைகள் செல்லுமாறு கட்டளையிட்டனன்.

காந்தளூரிற் கலம் அழித்தல் 994

போர் எப்பொழுது கிடைக்குமென் றெதிர்பார்த்திருந்த தானையும் மலைநாடு நோக்கிச் சென்றது. இப்படைக்கு தலைமைபூண்டவன் பஞ்சவன் மாராயன் என்பவன். இம்மலைநாடு, பிறர்கிட்டுதற் கரியதாய், மலையும் கடலும் சூழ்தரப் பரசுராமனால் அமைக்கப்

பட்டதாகும் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடு, கூறும். இதனைச் சாந்திமத்திவு எனக்கூறுவர். இம்மலைநாட்டுக் கடற்றுறைப்பட்டினமாகிய காந்தளூர்ச்சாலையில் போர் நடந்தது. "பாண்டியர்களையும் சேரமானையும் மலைநாட்டு எறிந்துகொண்ட பண்டாரம்" எனத் தஞ்சை ராசராசேச்சரத்துச் சாசனங்களில் பன்முறையும் கூறப்பட்டிருத்தலின், மலைநாட்டுப் போர்க்களத்தில் இவனை எதிர்த்தவர்கள் பாண்டியரும் சேரமானும் என்பது விளங்கிக்கிடப்பினும், அவர்கள் இன்னவரெனத் தெரியவில்லை. அவ்விருவரும் எதிர்த்துநின் றுவதென்னை, எலிப்பகை நாக முயிர்ப்பக் கெடுவது போலத் தோல்வியுற்றனர். இக் கன்னிப் போரில் காந்தளூர்ச்சாலைக்கண் நின்ற மரக்கலங்கள் அழிதலுற்றன. அவற்றினை அழித்து மலைநாட்டுப் பண்டாரங்கள் பலவுங் கைக்கொண்டு, தான் பிறந்த நாளாகிய சதயநாள்விழாவை அம்மண்டலத்து நடைபெறச்செய்து மீண்டு பாண்டிநாட்டினை அடைந்தான். அப்பொழுது அங்கிருந்தவன் பாண்டியன் அமரபுசங்கன் என்பவன். அவனை முறியடித்து அவனுக்குரிய அரணமைந்த நகராகிய உதகையைக் கொளுத்திப் பாழாக்கினான் இராசராசன். பஞ்சவன்மாராயன், விழிஞம் என்னும் துறைமுகத்தைக் கைக்கொண்டனன்.

இவ்விழிஞமும் காந்தளூரை யடுத்து மேற்கடற்கோடியில் இருந்தமையின் மெய்க்கீர்த்திகள் இதனை வேருக எடுத்தியம்பில போலும். இவன், 'மலைநாட்டைக் கைக்கொண்டு பதினெண் அரசர் சிரங்களைந்தா' னென விக்கிரமசோழ னுலாவும், 'பதினெண் அரசரைக்கொன்று உதகையைக் கொளுத்தினன்' எனக் குலோத்துங்க சோழனுலாவும் கூறுமாற்றல், மலைநாட்டு வென்றியும் உதகைகொண்டமையும் விளங்கிக்கிடப்பினும், அப்போர்க்களத்திற் கொலையுண்ட பதினெண்மர் இன்னவரென்பது சிறிதும் விளங்கவில்லை. உதகைவெற்றியும் சதயநாள் நடைபேறும் கலிங்கத்துப்பரணியால் வலியுறும். "யாண்டும் செழியரைத் தேசுகொள் கோராசகேசரிவர்மன்" என்னும் இவனது சாசனப் பகுதியால், இவன் பாண்டியர்களை முற்றும் வென்றடக்கியமை

விளங்குகின்றது. அது; இவனுக்குத் தென்னபராக்கிரமன் என்னும் விருதுப்பெயருண்மையானும், பாண்டிநாட்டிற் பற்பலவிடத்தும் இவன் சாசனம் காணப்படுவதானும், பாண்டிமண்டலம் இராசராச மண்டலமென வழங்கப்பெற்றமையானும், வலியுற்று நிற்றல்காண்க. இவ்வாறு இவன் சேர சோழ பாண்டியர் என்கிற மூவர் நாடாட்சிக் குரிமைபெற்ற பின் இவனுக்கு மும்முடி சோழன் என்னும் பெயருண்டாயிற்று.

அதன் பின்னர் வெங்கை நாட்டின் நிலைமை இவன் செவிக் கெட்டிற்று. அந்நாடு கீழைச் சாளுக்கிய நாட்டிற்குத் தலைநகராகும். கோதாவரி, கிருட்டிணு என்னும் பெயருடன் இப்பொழுது வழங்குவது. அது அரசனில்லாமையால் குழப்பமுற்றிருந்தது. அதனை அறிந்த இராசராசன், தன் பதினான்காம் யாண்டாகிய 998–99-ல், அதன்மீது படையெடுத்துச்சென்று அமைதியை உண்டாக்கிச் சத்திவர்மன் என்பவனை அதற்கு அரசனாக்கினான்.

வெங்கை நாடு 998–99.

வெங்கை நாட்டினைக் கொண்டபின்னர், அப்பிரமேயன் என்னும் படைத்தலைவன் படைகளை நடத்திவர, இராசராசன், கங்கபாடியின்மீது படையெடுத்துச் சென்றான். கங்கர், பல்லவருள் ஒருவகுப்பினராவார். அவர்க்கு இடமாதல்பற்றி, இது கங்கபாடியெனப்பெயர் பெற்றது. மைசூர் நாட்டின் கீழ்ப்பகுதியும் அதனை அடுத்துள்ள நாடுகளும் இதனைச் சார்ந்தவைகளாம். இதற்குத் தலைநகரம் காவிரிக் கரையிலுள்ள தாலக்காடு. இங்கிருந்த கங்கரை வென்றடக்கிக் கங்கபாடியை கைக்கொண்டு, இராசராசபுரம் என அதனைத் தன் பெயரினதாக்கி, அங்கு நின்றும் புறப்பட்டு நுளம்பபாடியைத் தாக்கினான்.

கங்கபாடி 998–99.

கங்கபாடிக் கருகிப்பது நுளம்பபாடி என்பது. இங்குள்ளவரும் பல்லவ வகுப்பினைச் சார்ந்தவரே. இதனை எளிதிற் கைப்பற்றியதன்றி இவ்விரண்டிற்கும் இடையிலிருந்த தடிகை பாடியையும் தன்னதாக்கினான். இதற்குத் தடிகைவழி எனவும் பெயருண்டு.

நுளம்பபாடி தடிகைபாடி 998–99.

இவ்வாறு ஒன்றன்பின் ஒன்ருக நாடுகளைக் கைக்கொண்டு குடமலை நாடு நோக்கி நடந்தது தானை. அங்குக் கொங்காள்வார் என்னும் ஒரு மரபினர் வாழ்ந்திருந்தனர். குடமலைநாடு என்றது குடகு. அதனை ஆண்டிருந்தான் மீனிசா என்பவன். பனசோகே என்னும் இடத்தில் போர் நடந்தது. அப்போர்க் களத்தில் மீனிசா பெருவன்மையுடன் போர்புரிந்தானெனினும், தோல்வியடைந்தான். அதனைக் கேள்வியுற்ற இராசராசன், அவனது வீரச்செய்கையை மெச்சி, அவனுக்கு சத்திரியசிகாமணி கோங்காள்வான் என்ற பட்டஞ்சூட்டி மாளவி என்னும் ஊரை நன்கொடை கொடுக்குமாறு தன் படைத் தலைவன் பஞ்சவன்மாராயனுக்குக் கட்டளையிட, அவனும் அதனை நிறைவேற்றினன். G. O. No. 961, Public, 2nd August 1913, Para 20. Epigraphist Collection No. 633 of appendix B of 1912. இதனால் வீரரை நன்குமதித்து மேம்படுத்துந் தன்மை இராசராசனிடத்தில் விளங்கி நின்றமை காண்க.

குடமலை நாடு 998–99.

அதன்பின் கொல்லத்தின்மீது சென்று, கொல்லம் கொல்ல தேசம் கொடுங்கோளூரையும் கைக்கொண்டு, அங்கு இறுமாப்புற்றிருந்த அரசர்களையும், அவர் ஏவலை மேற்கொண்டொழுகிய கடலரசரையும் வென்று, கீர்த்திபராக்கிரமசோழன் எனப் பெயர்பூண்டனன். Para 22, G. O. No. 919, Public, 29th July 1912.

கொல்லம்.

இவன் செய்கை இவ்வாருக, பஞ்சவன்மாராயன் மேலைச் சமுத்திரக்கரை முழுவதும் படையெடுத்துச் சென்று துளுவர், கொங்கணர், மலையர்களைச் சிறைகொண்டு, சேரர், தெலுங்கர், இரதிகர்களைப் புறங்கண்டு தன் அரசற்குப் பெரும்புகழ் நாட்டினன். Para 20, G. O. No. 961, Public, 2nd August 1913.

கொல்லத்தினின்று மீண்டு தன்னுடைடைந்த இராசராசன், ஒரு பெரும்படையுடன் செல்லுமாறு தன் மகன் இராசேந்திரனைக் கலிங்கநாட்டின்மீது அனுப்பினன். கலிங்கமென்பது, கோதா

வரியாற்றுக்கும் மகாநதிக்கும் இடையிலுள்ளநாடு. இப்பொழுது வடசர்க்காரிலிருப்பது. கீழைச்சளுக்கருக்கு வாழ்விடம். அங்கு

கலிங்கம்.

மும்மடிபீமன் பிருதாங்கபீமன் என்னும் விமலாதித்தன் அரசாண்டிருந்தான். இராசேந்திரன் அவனைவென்று சிறைகொண்டு வரும்போது கஞ்சத்திலுள்ள மயேந்திரமலையில் வெற்றித்தூண் நாட்டித் தஞ்சையை அடைந்தான். சிறைப்பட்ட விமலாதித்தனை, இராசராசன், பகைவனெனக் கருதி எத்தகைய தீமையும் புரியாது, மிக்க அன்புடன் நடத்தியதன்றித் தன்மகள் குந்தவையை அவற்கு மணஞ்செய்வித்து வெங்கைநாட்டிற்குத் தலைவனாக்கினான். எண்ணித்துணிந்த இவ் வரசசூழ்ச்சியால் கீழைச் சளுக்கருக்கும் சோழருக்கும் நெடுநாளாக இருந்த பகைமைநீங்கிச் சோழநாட்டு வடவெல்லையிற் குழப்பமும் ஒழிந்தது. அதுமுதற் சளுக்கியர்கள் சோழர்பால் பெண்கொள்ளும் வழக்குடையருமாயினர். அது, விமலாதித்தன் மகன் இராசராசன், கங்கைகொண்டசோழன் மகள் அம்மங்கதேவியையும், அவன் மகன் முதலாங் குலோத்துங்கன், இராசேந்திரதேவன் மகள் மதுராந்தகியையும், மணந்தமையால் விளங்கும்.

இனி, சோழநாட்டின் வடவெல்லையில் நெடுநாளாக இருந்த குழப்பம் நீங்கவே, தம்மவர்பால் பகைமை பாராட்டிவந்த இலங்கையர்மீது படையெடுத்துச் சென்றான். அங்கிருந்த சிங்களரை

ஈழம் 1001.

வென்றடக்கி ஈழநாட்டினைத் தன்கீழாக்கினான். ஈழமண்டலம், மும்முடிசோழமண்டலம் எனவும், அதனைச்சார்ந்த மாதோட்டம் என்னும் ஊர் இராசராசபுரம் எனவும், அதன்கணுள்ள கோயில் இராசராசேச்சரத்து மாதேவம் எனவும், வழங்கி வந்தமையாலும், தஞ்சை இராசராசேச்சரத்துக்கு, ஈழத்தினின்று பணமும் இலுப்பைப்பாலும் அனுப்ப ஏற்பாடு செய்திருந்தமையாலும், ஈழம் இவனது ஆட்சிக்குட்பட்டதென் றறியக்கிடத்தல் (கொழும்பு பொருட் காட்சிசாலையில் சேர்த்துவைத்துள்ள Epigraphist Nos, 616 and 618 of appendix B of 1912-இல்) காண்க.

இவ்வெற்றி இன்னவனது பதினேழாம் வருடசாசனத்தில் முதன் முதலிற் காணப்படுதலின், ஈழத்தை இவன் கைக்கொண்டது இவ்வருடத்தென்று துணியலாம்.

இரட்டபாடி 1007-8.

இனி, தம் ஆணைக்குட்பட்டவராகிய கருநடதேசத்தார்க்குரிய கங்கபாடி, நுளம்பபாடிகளை உள்ளிட்ட நாடுகளை இராசராசன் கைக்கொண்டது இராட்டிர கூடத்தாரை உறுத்திற்று. இராட்டிர கூடத்தார்க்கு மன்னவனாக இருந்த கன்னரதேவன், தம் மரபினனாகிய இராசாதித்தனை வஞ்சத்தாற் கொன்றது சோழர்கள் நெஞ்சத்தில் வேரூன்றிக்கிடந்தது. சோழரும் மேலைச்சளுக்காகிய இரட்டரும், படைவன்மையும் தோளாற்றலும் மிகவும் வாய்ந்தவர். இவ்விருவரும் தம் வன்மையைஅளந்தறிதற் கேற்ற காலத்தினை எதிர்பார்த்திருந்தவ ராதலின், இக்காரணங்களுள் ஒன்றை முன்னிட்டு இராசராசனுக்கும் இராட்டிர கூடத்தரசனான சத்யாசிரயனுக்கும் போர் நிகழ்ந்திருத்தல் வேண்டும். இராட்டிர கூடர் என்பவர் தெக்கணத்திருந்த மகாராட்டிரராவர். மேலைச் சாளுக்கிய குலத்தை வேரறுக்க நோக்கமுற்றிருந்த இவன், ஒன்பது நூறாயிரம் பேர்களடங்கிய பெருந்தானை ஒன்றினைத் தன் மகன் இராசேந்திரன் பால் அனுப்பினான். அரச கோளரியாகிய அவனும் படைகளை அணிவகுத்துநின்று,விடாமழைபோல அம்புபொழிந்து, செந்நீர் வெள்ளம் பெருக்கெடுத்தோடப், பிணமலை குவியக், கவந்தமாட, மிக்க வீரத்தோடு பொருது, நாட்டைச் சூறையாடி, நகரைக் கொளுத்திப் பாழ்படுத்தி, மகளிர், இளங்குழவி, மறையவர் என்றும் பாராமற் கொன்று, கன்னியரை மனைவியாக்கொண்டு அன்னவர் குலத்தையும் பாழாக்கி, அளவிலாத பொருளும் பெற்றுச் சினஞ் சிறிது தணிந்து தன்னாட்டை யடைந்தனன். Page 97, G. O. No. 961. Public, 2nd August 1913. இப்போர்க்களத்தில், அரசன் ஆணைக்கிணங்கிச், சத்தியாசிரயன் ஏறியிருந்த யானையைக் குத்திவீழ்த்த முயன்ற ஊற்றத்தூர் சுருதிமான் நக்கன் சந்திரனான ராசமல்ல முத்தரையன் என்னும் யானைப்படை வீரன் இறந்தனன். Epigraphist 515 of appendix B of 1912. இப்போர் நிகழ்ந்தது கி. பி. 1007–8 என ஹோட்டூர் சாசனத்

நால் விளங்குகின்றது. இப்போரில் இராசராசனுக்கு வென்றி யென்பதற்கு, "சத்தியாசிரயனை எறிந்து எழுந்தருளிவந்து" எனவும், "சத்தியாசிரயகுலகாலன்" எனவும் இராசராசேச்சரத்துச் சாசனங்களில் காணப்படுதலும், இவ்வெற்றிக்காக தட்சிணமேரு விடங்கர்க்கு அருச்சனைக்காகப் பொற்பூக்கள் பல இவன் கொடுத்தது, "ஸ்ரீ பாத புட்பமாக அட்டித் திருவடி தொழுதன பொற்பூ" என S. I. Ins Vol II. Part IV. Page 7 ஆல் அறியக்கிடத்தலும் சான்றாகும். "இரட்டபாடி ஏழரை யிலக்கமும்" என்னும் இவனது சாசனப்பகுதியும், இவ் வென்றியைக் குறித்ததேயாம். ஏழரை யிலக்கம் என்றது அந்நாட்டின் வருடத்திய வருவாய்; நாட்டின் வருவாயையும் உடன் சேர்த்துச் சொல்லுதல் பண்டை நாளைய வழக்கு. திருவாலங்காட்டுச் செப்பேடுகளும், லீடன் சாசனமும் இவ்வெற்றியை வலியுறுத்தும்.

இவன் இறக்குமளவும் வென்றியில் நோக்கமுற்ற வீரனாதலால், அலைகடல் நடுவிற் பலகலஞ் செலுத்தி, முந்நீர்ப்பழந்திவு பன்னீராயிரமும் கைப்பற்றினான். இவ்வாறு இவன் சென்ற சென்ற இடமெல்லாம் வென்று மேம்பட்டு விளங்கினமையால், இவனுக்கு "சயங்கொண்ட சோழன்" என்னும் பெயர் உளதாயிற்று. அதுமுதல், தொண்டை மண்டலம் சயங்கொண்ட சோழ மண்டலம் எனும் பெயர் கொடு வழங்கிற்று. இவன், உய்யக் கொண்டான் மலை நாயனார்க்கு, சயங்கொண்ட சோழன் என்னும் பொற்பட்டத்தினைத் தன் இருபத்தொன்பதாவது யாண்டிற் கொடுத்துளனாதலின், இவனுக்கு இப்பெயர் ஏற்பட்டது இவ்வருடத்தென்பது வெளிப்படை. S. I. I. Vol II. Page 312.

முந்நீர்ப்பழந்தீவு பன்னீராயிரம் 1013.

வென்றுகொண்ட நாடுகளைப் பெயர்க்கு வென்றதாக விடாமல் அவற்றில் பிரதிநிதிகளை நியமிக்கும் வழக்கம், இவன்பால் இருந்தது. அது, இவன் 14-ம் வருடத்தில் கைக்கொண்ட கங்கபாடியைச் சார்ந்த தகடூரைப் பெருந்தரம் பிரம்மாதிராசனுக்குக் கொடுத்து அதற்கு அவனைப் பிரதிநிதியாக்கியமையால் விளங்கும். Para 19, G. O. No. 665 Public, 28 July 1920.

இனி, இவனுக்கு யானைப்படை, குதிரைப்படை, காலாட்படைகளும் இருந்தன. அவை, "மும்மடி சோழத் தெரிந்த ஆனையாட்கள்", "பெருந்தனத்து ஆனையாட்கள்" "சிங்களாந்தகத் தெரிந்த குதிரைச் சேவகர்" "கேரளாந்தகத் தெரிந்த பரிவாரத்தார்" என்றின்னோரன்ன வழக்கால் நன்குணரப்படும்.

இனி, படைகள் நான்காகவும், சாசனங்களில் தேர்ப்படை காணப்படாமையின், இவன் காலத்து அஃது இல்லைபோலும் எனின்? அற்றன்று. தமிழ்நில வழக்குப்பற்றி நூல் இயற்றிய ஆசிரியர் தொல்காப்பியனார், "தானை யானை குதிரை யென்ற—நோனா ருட்கு மூவகை நிலையும்" எனத் தொல்காப்பியம் புறத்திணையியலில் பதினேழாம் சூத்திரத்துத் தானையுள்ளிட்ட மூன்றையுமே எடுத்துக்கூறிக், குதிரையா னன்றித் தேர் தானே செல்லாமையின், தேர்க்கு மறம் இன்றென்று அது கூறாராயினர். அதுபற்றியே, தமிழ வேந்தனாகிய இராசராசன் சாசனங்களும் தேர்ப்படையென வேறே எடுத்துரைத்தில என்றுணர்ந்து கொள்க.

இனி, இவன் தற்காப்பின்பொருட்டு, மெய்க்காப்பாளரையும், குதிரைப்படை ஒன்றினையும் தன்னோடு வைத்திருந்தனன் என்பதை, "பரிவார மெய்க்காப்பாளர்", "உடனிலை குதிரைச் சேவகர்" என்பன கொண்டு உய்த்துணரலாம். இன்னும், ஒவ்வொரு படைக்கலத்து நன்கு பயின்ற தனித்தனி படையும் இருந்தமை, "பண்டித சோழத் தெரிந்த வில்லிகள்" "மூலப்பரிவார விட்டேறு" (வேற்படை) என்பவற்றால் துணியலாம். இவன்பால், மெய்யுறைபூண்ட வீரர்படையும் இருந்தது. அது, "உத்தம சோழத் தெரிந்த அந்தளகத்தாளர்" என்பதால் விளங்கும். அந்தளகம்—மெய்புறை; கவசம் (coat of mail). படைகளைக் கூறுமிடத்து வாளா கூறாது, இன்னவிடத்து வென்ற தானை இது என்பது புலப்பட, "அழகிய சோழத் தெரிந்த" "அரிதுர்க்க லங்கணத் தெரிந்த" "சண்டபராக்கிரமத் தெரிந்த" "விக்கிரமாபரணத் தெரிந்த" என்பன போன்ற அடைகொடுத்தே வழங்கப்பட்டமை ஆராயின், தானை வகையும், ஒவ்வொரு தானைக்கும் பெயரும், அவற்றினிடத் திவன் வைத்திருந்த

நன்குமதிப்பும் உணரலாம். இவன், "முரட்டொழிற் சிங்களர் ஈழ மண்டலமும், முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும்" கொண்டமை மெய்க்கீர்த்தியால் அறியக்கிடத்தலின், இவன்பால், அலைகடல் நடுவிற் பலகலம் நடத்திப் போர்செயவல்ல கடற்படையும் இருந்தவா றுணரப்படும். இவைகளையன்றி இவனிடத்து உற்றிடத் துயிர்வழங்கும் வலங்கை வேளைக்காரப்படைகள் பதினன்கிருந்தன. அப்படைஞாது பெற்றி தேறமாட்டாதார் அவரை வேலைக்காரர் எனவே மதித்தனர். அவரோ என்றல், அன்னரல்லர்; "இன்னவாறு செய்வேன், செய்யாதொழியின் இன்ன கேடுறுவேன்" என வஞ்சின மொழிந்து, சொன்னவாறு நடப்பவர். கண்ணிணைக் காக்கின்ற இமைபோல அரசர்க்குத் தீங்கு நேராமற் காப்பவர். தம் சோர்வால் அவர்க்கொரு கேடு நேருமாயின் தாமும் உடனே தம்முயிரை மாய்ப்பவர். தம் அடியார்க்குக் கேடு நேராமல் முன்னின்று காத்தலின் முருகனை வேளைக்காரன் என்பர் திருவகுப்பு நூலுடையார் எனின், அவர் எத்துணை மேம்பாடுடையர் என்பதாராய்ந்து கொள்க. இன்னும், வேளைக்காரர் தன்மையை விரிவாக அறியவிரும்புவார், செந்தமிழ்ப் பதினறுந் தொகுதி மூன்றும் பகுதி 134-143-ஆம் பக்கங்களிற் பரக்கக் காண்க. சோழர்களிற் பெரியோனுகிய இன்னவன்பால், இப்படைகளை யல்லாமல், வென்றுகொண்ட நாடுகளில் குழப்ப முண்டாகமற் காத்தற் பொருட்டு 'நிலைப்படை'யும் இருந்திருத்தல் வேண்டுமென் றுய்த்துணர தக்கது.

இனி, இவன் காலத்தில் எல்லாப்படைக்கும் தலைமைபூண்பாரை மகாதண்டநாயகன் எனவும், ஒவ்வொரு படைக்கே தலைவராயிருப்பாரைத் தண்டநாயகன் எனவும், சேனபதி எனவும், சாமந்தன் எனவும் வழங்கினர். இவனது, பெரும்படைத் தலைவர், மகாதண்டநாயகன் பஞ்சவன்மாராயன் என்பவர். சேனபதியான சீ கிருட்டினன் ராமனுன மும்முடி சோழப் பிரமமாராயனும், சேனபதி குரவன் உலகளந்தான் என்கிற இராசராச மாராயனும் படைத்தலைவராவர். இவர்களையன்றி அப்பிரமேயன் எனப் படைத்தலைவன் ஒருவன் உண்டு. மாராயம் என்பது அரசனற் செய்யப்படும் சிறப்பு.

௳

# முதலாங் குலோத்துங்க சோழன்.

(முற்றொடர்ச்சி 441 பக்கம்.)

திருவாளர், T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

## ஆறாம் அதிகாரம்.

### குலோத்துங்கனது அரசாட்சி.

நம் இராசேந்திரன் சோழமண்டலத்தின் ஆட்சியைக் கி. பி. 1070-ஆம் ஆண்டில் எய்திய பின்னர், ஐந்தாண்டுகள் வரை இவனுக்கு இப்பெயரே வழங்கிவந்தது. அதற்கு முன்னர் இவன் வேங்கிநாட்டை யாண்டுவந்தபோது அந்நாட்டின் ஒழுகலாற்றின் படி, 'விட்டுணுவர்த்தனன்' என்ற பெயரும் அங்கு வழங்கிற்றென்பதை முன்னரே கூறியுள்ளோம். ஆயினும் சோணாட்டரசுரிமையை யடைந்தபிறகு கி. பி. 1075 முதல் குலோத்துங்க சோழன் என்ற பெயரே இவனுக்கு வாணாள் முழுமையும் நிலைபெற்றுவழங்கலாயிற்று. குலோத்துங்கன் என்ற பெயருடைய சோழமன்னருள் இவனே முதலவனாதலின், இவனை முதலாங் குலோத்துங்கன் என்று வழங்குதலே அமைவுடைத்து. இனி, நாமும் இவனைக் குலோத்துங்கன் என்றே எழுதுவோம். இப்பெயரேயன்றி இவனுக்கு வழங்கிய வேறுபெயர்களும் சில உள. அவை, அபயன், விசயதரன், சயதுங்கன், விருதராசபயங்கரன், கரிகாலன், இராசநாராயணன் என்பன. இப்பெயர்கள் இவனைக் குறித்தலைக் கல்வெட்டுக்களிலும் கலிங்கத்துப்பரணியிலும் தெளி

வாகக் காணலாம். சோழ அரசர்கள் தத்தம் ஆட்சியின் தொடக்கத்தில் ஒருவர்பின் ஒருவராகப் புனைந்துகொண்டுவந்த இராசகேசரி, பரகேசரி என்ற பட்டங்களுள் நம் குலோத்துங்கன் இராசகேசரி என்ற பட்டம் பெற்றவன் ஆவான்.

இவ்வேந்தன்காலத்து நிகழ்ந்த போர்களுள்ளே ஒன்றிரண்டொழிய எஞ்சியன வெல்லாம் இவனது ஆட்சியின் பதினுன்காம் ஆண்டிற்கு முன்னரே முடிவெய்தின. போர்களெல்லாம் ஒருவாறு முடிவுற்றபின்னர், கி. பி. 1084-ஆம் ஆண்டில் இவன் திரிபுவனச் சக்கரவர்த்தி என்ற பட்டம் புனைந்து கொண்டு பல்வகையானும் பெருமையும் புகழும் எய்தி இனிது வாழ்ந்து வந்தான். இப்பட்டம் புனைந்து ஆட்சிபுரிந்த சோழமன்னருள் இவனே முதலவன் ஆவான். இவனுக்குப் பின்னர் ஆட்சிபுரிந்த இவனது வழித்தோன்றல்களுள் ஒவ்வொருவரும் இப்பட்டம் புனைந்தே அரசாண்டு வந்தனர். 'திரிபுவனச் சக்கரவர்த்தி' என்ற தொடர்மொழி சேரமண்டலம், சோழமண்டலம், பாண்டிமண்டலம் ஆகிய மூன்றுக்கும் சக்கரவர்த்தி என்ற பொருளையுணர்த்தும் போலும்.

இங்ஙனம் பெருமையுடன் வாழ்ந்துவந்த குலோத்துங்கன் நாட்டிற்கு நலம் புரியக்கருதி முதலில் ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் அரசர்க்கு நெடுங்காலமாகச் செலுத்திவந்த தலைவரியாகிய சுங்கத்தை நீக்கினன். ஓர் அரசன் தன் நாட்டிலுள்ள எல்லாமக்கட்கும் இனிமை பயப்பவாய்ப் பொதுவாகச் செய்யக்கூடிய நலங்களுள் இதனினும் சிறந்தது வேறு யாதுளது? இதனல் மக்கள் எல்லோரும் இவனை வாயாரவாழ்த்திச் 'சுங்கந் தவிர்த்த சோழன்' என்று வழங்குவாராயினர். 'எவருந் தவிர்க்காத சுங்கந் தவிர்த்தோன்' என்று புலவர் பெருமக்களும் இவனைப் புகழ்ந்து பாராட்டினர். தஞ்சாவூரைச் சார்ந்த கருந்திட்டைக்குடி இவனது ஆட்சிக்காலத்தில் சுங்கந்தவிர்த்த சோழனல்லூர் என்ற பெயரும் எய்திற்று. பின்னர், சோழமண்டலம் முழுவதையும் அளந்து நிலங்களின் பரப்பை உள்ளவாறு அறிந்தாலன்றி நிலவரியை ஒழுங்குபடுத்தல் இயலாது என்று

கருதி, அதனை முற்றிலும் அளக்குமாறு ஆணையிட்டான். அவ் வேலையும் அவன் பட்டமெய்திய பதினாறும் ஆண்டாகிய கி. பி. 1086-ல் தொடங்கப்பெற்று, இரண்டு ஆண்டுகளில் முடிவுற்றது. பிறகு, இவன், குடிகள் எல்லோரும் ஆறிலொருகடமை நிலவரி செலுத்திவருமாறு ஏற்பாடுசெய்தான். இங்ஙனமே இவனது பாட்டனுக்குத் தந்தையாகிய முதலாம் இராசராசசோழன் காலத்தும் சோழமண்டலம் ஒருமுறை அளக்கப்பெற்றதோடு ஆறிலொருகடமை வரியும் விதிக்கப்பெற்றது. குலோத்துங்கனது ஆளுகையில் வரி விதிக்கப்படாமல் ஒதுக்கப்பெற்ற நிலங்களும் உள. அவை, ஊர்நத்தம், குளம், கம்மாளச்சேரி, பறைச்சேரி, வெள்ளாண் சுடுகாடு, பறைச் சுடுகாடு, ஊர்நிலத்தூடறுத்துப் போன வாய்க்கால், சிகோயில், ஐயன் கோயில், பிடாரிகோயில், கழனிக்குளங்கள், பறைச்சேரிநத்தம், நந்தனவனம், குடியிருக்கை, ஊரிருக்கை, ஓடை, ஈழச்சேரி, வண்ணாரச்சேரி, பெருவழி, திருமுற்றம், ஊருணி, கொட்டகாரம், களம், தேவர் திருமஞ்சனக் குளம், கன்றுமேய்பாழ், சுடுகாட்டுக்குப்போகும் வழி, மனை, மனைப்படப்பை, கடை, கடைத்தெரு, மன்று, கிடங்கு, புற்று, காடு, உவர், ஆறு, ஆறிடுபடுகை, உடைப்பு, மீன்பயில் பள்ளம், தேன்பயில் பொதும்பு என்பனவாம். வரிவிதிக்கப்பெறாத மேலே குறித்துள்ள இடங்களை ஆராயுங்கால், அந்நாளில் விளை நிலங்களுக்கு மாத்திரம் நிலவரிவாங்கப் பெற்றுவந்ததேயன்றி மற்றை நிலங்களுக்கு வரி வாங்கப்படவில்லை என்பது நன்கு அறியக் கிடக்கின்றது.

நம் குலோத்துங்கன் தன் நாட்டிலுள்ள குடிகளது உழவுத் தொழில் வளர்ச்சியுறுமாறு ஆங்காங்குப் பல ஏரிகளையும் குளங்களையும் வெட்டுவித்தான்; காடுகளை யழிப்பித்து அவர்கள் வாழ்தற்கேற்ற பல ஊர்களும் நகரங்களும் அமைத்தான்; மக்களது தெய்வபத்தி ஓங்குமாறு ஊர்கள்தோறும் சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் பலபுதிய கோயில்கள் எடுப்பித்ததோடு அவற்றின் பூசை, திருவிழா முதலியவற்றிற்கு நிபந்தங்களும் விட்டான்; அன்றியும் நகரங்களிலுள்ள பழைய செங்கற்கோயில்களை இடித்து

அவற்றைக் கற்றளிகளாக எடுப்பித்தான். இங்ஙனம் இவனது ஆட்சிக்காலத்தில் மக்கட்குண்டான நன்மைகள் பலவாம். விரிப்பிற் பெருகும்.

இக்குலோத்துங்கனது ஆட்சியின் 50-ஆம் ஆண்டில் வரையப்பெற்ற கல்வெட்டுக்கள், திருச்சிராப்பள்ளி சில்லா உடையார் பாளையந் தாலூகாவிலுள்ள காமரசவல்லியிலும், தஞ்சாவூர் சில்லா மன்னார்குடி தாலூகாவிலுள்ள கோட்டூரிலும் காணப்படுகின்றன. ஆதலால் இவன் சோழமண்டலத்தை ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆண்டிருத்தல் வேண்டும். இவன் தன் பாட்டனாகிய கங்கை கொண்ட சோழனும், மாமன்மார்களாகிய இராசாதிராசன், விசயராசேந்திரன், வீரராசேந்திரன் முதலானோராலும் அரும்பாடு பட்டு உயரிய நிலைக்குக் கொண்டுவரப்பட்ட சோழமண்டலத்தை, அதன் பெருமையுஞ் சிறப்பும் ஒருசிறிதுங் குறையாதவாறு, யாண்டும் அமைதி நிலைபெறச் செங்கோல் செலுத்திய பெருந்தகை ஆவன். இவனுக்கு முன்னர் அரசாண்ட சோழன் கரிகாற் பெருவளத்தான், முதலாம் இராசராசசோழன், கங்கை கொண்ட சோழன் முதலான பேரரசர்களை இவனுக்கு ஒப்பாகக் கூறலாமேயன்றி ஏனையோரைக் கூறுதல் சிறிதும் பொருந்தாது. இவன் காலத்திற்குப் பின்னர் இவனுக்கு ஒப்பாகக் கூறத்தக்க சோழமன்னன் ஒருவனும் இலன் என்றே கூறிவிடலாம். எனவே, நம் தமிழகம் தன்னைப் புகழுக்கும் பெருமைக்கும் நிலைக்களமாக்கிக் கோடற்குச் சிற்சில காலங்களில் அரிதிற்பெறும் பெருந்தவப்புதல்வர்களுள் ஒருவனாகவே இவனைக்கருதல் வேண்டும். இவனது ஆட்சிக்காலத்தில் சோழநாடு வடக்கேயுள்ள மகாநதிமுதல் தெற்கேயுள்ள குமரிமுனைவரையிற் பரவியிருந்தது. அந்நாளில் சோழநாட்டிற்கு வடவெல்லையாகவும் மேலைச்சளுக்கிய நாட்டிற்குத் தென்னெல்லையாகவும் அமைந்திருந்தது இடையிலுள்ள துங்கபத்திரையாறே ஆகும். இப்பெருநில வரைப்பில் நம் குலோத்துங்கன் சக்கரவர்த்தியாக வீற்றிருந்து ஐம்பது யாண்டுகள் அமைதியாக ஆட்சிபுரிந்தது மக்களாகப்பிறந்தோர் பெறுதற்குரியனவும் அரியனவுமாகிய பெரும்பேறுகளுள் ஒன்றேயாகும் என்று கூறுதலில் தடை யாதுளது ?

## ஏழாம் அதிகாரம்.

---

### குலோத்துங்கனது போர்ச்செயல்கள்.

நம் குலோத்துங்கன் நடத்திய போர்களுள் ஒன்றிரண்டொழிய ஏனையவெல்லாம் இவனது ஆட்சியின் முற்பகுதியிலேயே நிகழ்ந்துள்ளன என்று முன்னரே கூறியுள்ளோம். அப்போர் நிகழ்ச்சிகளைத் தற்காலத்தே வெளிவந்துள்ள கல்வெட்டுக்களைக்கொண்டு ஒருவாறு ஆராய்ந்து அறிந்துகொள்ளலாம். அவை:—

1. மேலைச்சளுக்கியருடன் நடத்திய முதற்போர்.
2. பாண்டியருடன் நடத்திய முதற்போர்.
3. மேலைச்சளுக்கியருடன் நடத்திய இரண்டாம் போர்.
4. பாண்டியருடன் நடத்திய இரண்டாம் போர்.
5. சேரருடன் நடத்திய போர்.
6. தென்கலிங்கப் போர்.
7. வடகலிங்கப் போர்.

என்பன. இப்போர் நிகழ்ச்சிகளின் காரணத்தையும் இவற்றின் முடிவையும் கல்வெட்டுக்களும் முன்னூல்களும் உணர்த்தும் குறிப்புக்களைக்கொண்டு சிறிது விளக்குவாம்.

1. மேலைச்சளுக்கியருடன் நடத்திய முதற்போர்:—இது குலோத்துங்கன் மேலைச்சளுக்கிய மன்னனாகிய ஆறாம் விக்கிரமாதித்தனோடு கி. பி. 1076 ஆம் ஆண்டில் நடத்திய போர் ஆகும். தன் மைத்துனனாகிய அதிராசேந்திரசோழன் உண்ணாட்டுக் கலகத்திற் கொல்லப்பட்ட பின்னர், சோழவள நாட்டில் குலோத்துங்க சோழன் முடி சூடியதை யுணர்ந்த சளுக்கிய விக்கிரமாதித்தன் வேங்கி நாடும் சோணாடும் ஒருங்கே ஓர் அரசனது ஆட்சிக்குட்பட்டிருத்தல் தன் ஆளுகைக்குப் பெரியதோர் இடுக்கண் விளைத்தற்கு ஏதுவாகும் என்று கருதிக்,குலோத்துங்கனது படைவலிமையையும் வீரத்தையும் குலைத்தற்குப் பெரிதும் முயன்றான்.

அவன், அம்முயற்சியில் வெற்றியுறும் வண்ணம் ஐந்து ஆண்டுகளாகப் படை சேர்த்தும் வந்தான். இந்நிலைமையில் விக்கிரமாதித்தனுக்கும் அவனது தமையனாகிய இரண்டாம் சோமேச்சுரனுக்கும் ஒற்றுமைகுலைந்து மனவேறுபாடு உண்டாயிற்று. உண்டாகவே, விக்கிரமாதித்தன் தன் தம்பியாகிய சயசிங்கனை அழைத்துக்கொண்டு மேலைச்சளுக்கியரது தலைநகராகிய கல்யாணபுரத்தைவிட்டுச் சென்றான். பிறகு, மேலைச்சளுக்கியரது இரட்டமண்டலம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுச் சோமேச்சுரனும் விக்கிரமாதித்தனும் தனித்தனியாக ஆளப்படும் நிலையை அடைந்தது. இதனை யுணர்ந்த குலோத்துங்கன் தமையனாகிய சோமேச்சுரனைத் தன்பாற் சேர்த்துக்கொண்டான். பின்னர், விக்கிரமாதித்தன் தான் சேர்த்து வைத்திருந்த படைகளைத் திரட்டிக்கொண்டு குலோத்துங்கனோடு போர் புரியப் புறப்பட்டான். திரிபுவனமல்ல பாண்டியன், கதம்பகுலத்துச் சயகேசி முதலானோர் விக்கிரமாதித்தனுக்குப் பேருதவிபுரிந்தனர். அவனது தம்பி சயசிங்கனும் அவன் பக்கல் நின்று வேண்டியாங்கு உதவினான். சோமேச்சுரன் குலோத்துங்கன் பக்கத்திருந்து போர் புரிந்து உதவுவதாக உறுதியளித்திருந்தான். இறுதியில் குலோத்துங்கனது படையும் விக்கிரமாதித்தனது படையும் துங்கபத்திரை யாற்றங்கரையில் எதிர்த்துப் போர் செய்தன. விக்கிரமாதித்தன் தன் தமையனாகிய சோமேச்சுரன் குலோத்துங்கனோடு சேர்ந்து தன்னுடன் போர் செய்ய இயலாதவாறு ஓர் சூழ்ச்சிசெய்து இடை நின்று தடுத்தான். இப்போரிற் குலோத்துங்கன் வெற்றியாதல் தோல்வியாதல் எய்தினான் என்று கூறுதற்கிடமில்லை. ஆயினும் நம் குலோத்துங்கனுக்கு உதவி புரிதற்குத் துணைப்படை கொணர்ந்த சோமேச்சுரன் தோல்வியுற்றுத் தன் தம்பியாகிய விக்கிரமாதித்தனாற் சிறைபிடிக்கப்பட்டு நாட்டையும் இழந்தான். குலோத்துங்கனைச் சோழநாட்டினின்று துரத்துவதற்கு விக்கிரமாதித்தன் ஐந்து ஆண்டுகளாகச் சேர்த்து வந்த பெரும் படையானது அவன் தன் தமையனைத் துங்கபத்திரைப் போரில் இங்ஙனம் தோல்வியுறச் செய்து இரட்டமண்டலத்துள் தன் தமையன்பாலிருந்த நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளுவதற்குப்

பெரிதும் பயன்பட்டது. விக்கிரமாதித்தனும் மேலைச்சளுக்கிய நாடாகிய இரட்டப்பாடி ஏழரைலக்கம் முழுமைக்கும் முடிமன்னன் ஆயினன். முதலாம் மேலைச்சளுக்கியப் போர் இவ்வாறு முடிவெய்தியது. இதனை முதலாம் துங்கபத்திரைப் போர் என்றுங் கூறலாம்.

2. பாண்டியருடன் நடத்திய முதற்போர்:—இது நம் குலோத்துங்கனது ஆட்சியின் ஐந்தாம் ஆண்டில் நிகழ்ந்த மற்றொரு போராகும். இப்போரைப்பற்றிய செய்திகள் இப்போது நன்கு புலப்படவில்லை. குலோத்துங்கனது மெய்க்கீர்த்தியும் இதனை விளக்கிற்றில்லை. ஆயினும், இது, விக்கிரமாதித்தனுக்குத் துணையாக நின்று போர்புரிந்த திரிபுவனமல்ல பாண்டியனுடன் குலோத்துங்கன் நடத்திய போராய் இருத்தல் வேண்டுமென்பது ஊகிக்கப்படுகிறது. இப்போர் நிகழ்ச்சியில் நம் குலோத்துங்கன் வெற்றிபெற்றான். இவனது பகைவனாகிய பாண்டியன் கொல்லப்பட்டான். இது குலோத்துங்கன் பாண்டியரோடு நடத்திய முதற் போராதலின், இதனை முதலாம் பாண்டியப்போர் என்று கூறுதல் பொருத்தமுடையது.

3. மேலைச்சளுக்கியருடன் நடத்திய இரண்டாம் போர்:— இது, குலோத்துங்கனது ஆட்சியின் 11-ஆம் ஆண்டாகிய கி. பி. 1081ல் நிகழ்ந்தது; விக்கிரமாதித்தன் அவன் தம்பி சயசிங்கன் ஆகிய இருவரோடும் நம் குலோத்துங்கன் நடத்தியதாகும். இச்சண்டைக்குரிய காரணம் தற்காலத்தில் நன்கு புலப்படவில்லை. குலோத்துங்கன் பெரும் படையைத்திரட்டிக்கொண்டு, வடக்கு நோக்கிச் சென்று விக்கிரமாதித்தனது தம்பியாகிய சயசிங்கன் என்பான் அரசப்பிரதிநிதியாகவிருந்து ஆண்டுகொண்டிருந்த வனவாசியைக் கைப்பற்றிக்கொண்டு, தன்னை வந்தெதிர்த்த விக்கிரமாதித்தனோடு கோலார் சில்லாவிலுள்ள நங்கிலி என்னுமிடத்தில் பெரும் போர் புரிந்தனன். இப்போரில், குலோத்துங்கன் வெற்றி எய்தியதோடு விக்கிரமாதித்தனைத் துங்கபத்திரை யாற்றிற் கப்பால் துரத்தியுஞ் சென்றான். அங்ஙனந் துரத்திச் சென்றவன் இடையிலுள்ள மணலூர், அளத்தி முதலான இடங்களில்

மீண்டும் அவனைப் போரிற் புறங்கண்டான். அளத்தியில் நிகழ்ந்த போரில், இவன் மேலைச்சளுக்கியர்களுடைய களிறுகளைக்கவர்ந்து கொண்டான். அன்றியும் இவன் மைசூர் நாட்டிலுள்ள நவிலையில் சளுக்கிய தண்டநாயகர்களால் காக்கப்பெற்ற ஆயிரம் யானைகளையும் கைப்பற்றிக் கொண்டனன் என்று கலிங்கத்துப்பரணி கூறுகின்றது. (பரணி 373) இறுதியில் துங்கபத்திரைக் கரையில் இரண்டாம் முறை நடைபெற்ற போரில் விக்கிரமாதித்தனும் சயசிங்கனும் தோல்வியுற்று ஓடி ஒளிந்தனர். கங்கமண்டலமும் கொண்கானமும் நம் குலோத்துங்கன் வசமாயின. இங்ஙனம் போரில் வாகைசூடிய குலோத்துங்கன் எண்ணிறந்த யானைகளையும் பொருட்குவியலையும் பெண்டிர்களையும் கவர்ந்து கொண்டு சோணாட்டை யடைந்தான்; அவற்றுள், யானைகளையும் பொருட்குவியலையும் தான் போரில் வெற்றிபெறுதற்குக் காரணமாயிருந்த போர்வீரர்களுக்கும் படைத்தலைவர்களுக்கும் பகுத்துக் கொடுத்து அவர்களுக்கு மகிழ்ச்சியை யுண்டு பண்ணினான்; சிறைபிடிக்கப் பட்ட மகளிரைத் தன் அரண்மனையிலுள்ள தேவிமார்களுக்கு வேலை செய்து வருமாறு வேளம்புகுவித்தான். நம் குலோத்துங்கன் மேலைச்சளுக்கியரோடு நடத்திய இரண்டாம் போரும் இவ்வாறு வெற்றியுடன் முடிவுற்றது.

4. பாண்டியருடன் நடத்திய இரண்டாம் போர்:--குலோத்துங்கன் நடத்தியதாக அறியப்படும் இரண்டாம் பாண்டியப் போரும் இவனது ஆட்சியின் பதினான்காம் ஆண்டாகிய கி. பி. 1084-ன் தொடக்கத்தில் நடைபெற்றது. வடக்கேயுள்ள நுளம்பப்பாடிப் பாண்டியனோடு கி. பி. 1076-ல் இவ்வேந்தன் ஒரு போர் புரிந்துள்ளமையின், தெற்கேயுள்ள செந்தமிழ்ப்பாண்டி நாட்டின் அரசர்களுடன் கி. பி. 1084-ல் இவன் நிகழ்த்திய இப்போர் இரண்டாம் பாண்டியப் போர் எனப்பட்டது.

முதலாம் பராந்தக சோழன், முதலாம் இராசராச சோழன் ஆகிய இருவேந்தர்களது காலங்களில், பாண்டியர் தம் நிலைகுலைந்து சோழர்களுக்குத் திறை செலுத்தும் சிற்றரசர் ஆயினர். ஆனால், அவர்கள் சிறிது படை வலிமை எய்தியவுடன் அடிக்கடி சோழர்

களுடன் முரண்பட்டுத் தாம் முடிமன்னராதற்கு முயன்று வந்தனர். அவர்கள், அங்ஙனம் முரண்பட நேர்ந்தமையின் சோழமன்னர்களுள் ஒவ்வொருவரும் தம் தம் ஆட்சிக்காலங்களில் பாண்டி நாட்டின்மீது படையெடுத்துச்செல்லல் இன்றியமையாத தாயிற்று. இதனால் நேரும் துன்பங்களையுணர்ந்த கங்கைகொண்ட சோழன் எனப்படும் முதலாம் இராசேந்திரசோழன் பாண்டியரை அரியணையினின்று இறக்கித் தன் மக்களுள் ஒருவனுக்குச் சோழ பாண்டியன் என்னும் பட்டம் அளித்துப் பாண்டிநாட்டின் தலை நகராகிய மதுரையில் அரசப்பிரதிநிதியாயிருந்து அந்நாட்டை யாண்டு வருமாறு ஏற்பாடு செய்தான். அங்ஙனமே அவனது மக்களுள் இருவரும் பேரன் ஒருவனும் சோழபாண்டியன் என்னும் பட்டத்துடன் அம்மதுரைமாநகரிலிருந்து ஆட்சிபுரிந் தனர். வீரராசேந்திரன் காலத்திற்குப்பின்னர் அதிராசேந்திரன் சளுக்கிய விக்கிரமாதித்தனது உதவியால் முடிசூட்டப்பெற்றுச் சோழவளநாட்டை ஆண்டுவந்தபோது பாண்டியர் தாம் முடி மன்னராதற்கு அதுவே தக்ககாலமெனக்கருதித் தம் நாட்டை ஐந்து பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு ஐந்து அரசர்களாகவிருந்து அவற்றை ஆளத்தொடங்கினர். அவர்களது ஆளுகையும் கி. பி. 1084 வரை நடைபெற்றுவந்தது. குலோத்துங்கன் வடக்கே நடத்திய போர்கள் எல்லாம் ஒருவாறு முடிவெய்தியபின்னர், தெற்கேயுள்ள பாண்டிநாட்டையும் தன்னடிப்படுத்த எண்ணி, இப்பாண்டியர் ஐவர்மீதும் தும்பைசூடிப் போர்க்கெழுந்தனன். இதனையுணர்ந்த பாண்டியர் ஐவரும் ஒருங்குசேர்ந்து பெரும் படையோடு வந்து இவனை எதிர்த்துப் போர்புரிந்தனர். இப் போரில் பெருவீரனாகிய நம் குலோத்துங்கனே வெற்றியடைந் தான். பாண்டியர் ஐவரும் புறங்காட்டி ஓடி ஒளிந்தனர். குலோத் துங்கன் பாண்டிநாட்டின் பல பகுதிகளைக் கைப்பற்றியதோடு அவ்விடங்களிலெல்லாம் வெற்றித்தூண்களும் நிறுவினான். இப் போரில் குலோத்துங்கன் கைப்பற்றிய நாடுகளுள் முத்துச் சலாபத்திற்குரிய மன்னார் குடாக்கடலைச் சார்ந்தநாடும் பொதியிற் கூற்றமும் கன்னியாகுமரிப் பகுதியும் சிறந்தவைகளாகும்.

5. சேரருடன் நடத்திய போர் :—இது நம் குலோத்துங்கன் குடமலை நாட்டில் சேரரோடு நடத்திய போராகும். இதுவும் குலோத்துங்கனது ஆட்சியின் 14-ஆம் ஆண்டில் நடைபெற்றது. இப்போரும் சேரரைத் தனக்குத்திறை செலுத்தும் சிற்றரசர்களாகச் செய்யும் வண்ணம் குலோத்துங்கனால் தொடங்கப் பெற்றது. திருவன்ந்தபுரத்திற்குத் தெற்கே பத்துமைல் தூரத்தில் மேலைக்கடற்கோடியிலுள்ள விழிஞத்திலும், திருவனந்தபுரத்தைச் சார்ந்த காந்தளூர்ச் சாலையிலும், குமரிமுனைக்கு வடக்கிற் பத்து மைலிலுள்ள கோட்டாறு என்ற ஊரிலும் சேரநாட்டு வேந்தனுக்கும் நம் குலோத்துங்கனுக்கும் பெரும்போர்கள்நடந்தன; சிறிதும் அஞ்சாது எதிர்த்துப் போர்புரிந்த மலைநாட்டாருள் பலர் போர்க்களத்தில் உயிர் துறந்தனர். குலோத்துங்கன் காந்தளூர்ச் சாலையிலுள்ள சேரமன்னனது கப்பற்படையினை இருமுறை யழித்துப் பெருமை எய்தினன். கோட்டாறும் எரிகொளுத்தப்பெற்று அழிக்கப்பட்டது. சேரமன்னனும் குலோத்துங்கனுக்குத்திறை செலுத்தும் சிற்றரசர்களுள் ஒருவனாயினன். சேரரும் பாண்டியரும் தம் நிலைமை சிறிது உயர்ந்தவுடன் தன்னுடன் முரண்பட்டுத் தீங்கிழைக்காதவாறு கோட்டாறு முதலான இடங்களில் சிறந்த தலைவர்களின்கீழ் நிலைப்படைகள் குலோத்துங்கனால் அமைக்கப் பெற்றன; அவ்வாறு கோட்டாற்றில் நிறுவப்பட்ட படைக்குக் 'கோட்டாற்று நிலைப்படை' என்று பெயர் வழங்கிற்று.

6. தென்கலிங்கப்போர் :—இது குலோத்துங்கனது ஆட்சியின் 26-ஆம் ஆண்டாகிய கி. பி. 1096ல் நிகழ்ந்தது. இப்போர் வேங்கிநாட்டில் அரசப் பிரதிநிதியாயிருந்த அரசிளங்குமரன் விக்கிரமசோழன் என்பான் தன் இளமைப்பருவத்தில் தென்கலிங்கநாட்டின் மன்னனாகிய தெலுங்கவீமன்மேற் படையெடுத்துச்சென்று அவனை வென்றதையே குறிக்கின்றது. இதனை விக்கிரமசோழனது மெய்க்கீர்த்தி,

'தெலுங்க வீமன் விலங்கன்மிசை யேறவும்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்

ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி
வேங்கை மண்டலத் தாங்கினி திருந்து
வடதிசை யடிப்படுத்தருளி'

என்று தெளிவாக விளக்குதல் காண்க.

இப்போர் குலோத்துங்கனது மகனாகிய விக்கிரமனால் நிகழ்த்தப்பெற்றதாயினும் குலோத்துங்கனது ஆட்சிக்காலத்திலே நடைபெற்றதாதலின் மகனது வென்றிச்சிறப்புத் தந்தைக் கேற்றியுரைக்கப்பட்ட தென்றுணர்க.

7. வடகலிங்கப்போர்:—இது குலோத்துங்கனது ஆட்சியின் 45-ஆம் ஆண்டாகிய கி. பி. 1115-ஆம் ஆண்டிற்கு முன்னர் நடைபெற்ற போராகும்; வடகலிங்க வேந்தனாகிய அனந்தவருமன் என்பானோடு குலோத்துங்கன் நடாத்தியது. வடகலிங்கத்திற்கு நேரிற்சென்று இப்போரை வெற்றியுற நடாத்தித் திரும்பியவன் குலோத்துங்கனது படைத்தலைவர்களுள் முதலவனாகிய கருணாகரத் தொண்டைமானே யாவன். இவனோடு பல்லவராயன், வாணகோவரையன், முடிகொண்டசோழன் என்ற மூன்று படைத்தலைவர்களும் அங்குச் சென்றிருந்தனர். குலோத்துங்கனது ஆட்சியில் நடந்த போர்களுள் இதுவே இறுதியில் நடந்தது. வடகலிங்கத்தில் நடந்த இப்போர் நிகழ்ச்சியை விரித்துக் கூறும் நூல் கலிங்கத்துப்பரணி என்பது. அந்நூல் இப்போரைப் பற்றியுணர்த்தும் செய்திகளை அடியிற் காண்க.

ஒருநாள் நம் குலோத்துங்கன் காஞ்சிமா நகரிலுள்ள அரண்மனையில் ஓவியமண்டபத்து வீற்றிருந்தபோது, வாயிற்காப்போரில் ஒருவன் ஓடிவந்து அரசனது அடிகளை முடிபடவணங்கி, 'எம்பெருமானே, வேந்தர் பல்லோர் திறைப்பொருள் கொணர்ந்து கடைவாயிலின்கண் காத்துக்கொண்டிருக்கின்றனர்' என்றனன். அதனைக்கேட்ட அரசன் 'அன்னாரை விடுக' என,

தென்னவர் வில்லவர் கூபகர் சாபகர் சேதிபர் யாதவரே
கன்னடர் பல்லவர் கைதவர் காடவர் காரிபர் கோசலரே.

கங்கர்க ராளர்க விந்தர்து மிந்தர்கடம்பர்நு ளும்பர்களே
வங்கரிலாடர் மாராடர் விராடர் மயிந்தர் சயிந்தர்களே
சிங்களர் வங்களர் சேகுணர் சேவணர் செய்ய வரையணரே
கொங்கணர் கொங்கர் குலுங்கர்சௌந்தியர் குச்சரர் கச்சியரே
மத்தவர் மத்திரர் மாளுவர் மாகதர்மச்சர்மி லேச்சர்களே
குத்தர் குணத்தர் வடக்கர் துருக்கர் குருக்கர் வியத்தர்களே

என்ற மன்னர்கள் அம்மன்னனை யணுகிப் பணிந்தெழுந்து 'மன்னர் மன்ன! அடியேம் நினக்கு இறுக்கக்கடவதாய திறைப் பொருள் கொணர்ந்துளேம்' என்றுரைத்துத் தாம் கொண்டு வந்துள்ள பொற்கலம் மணித்திரள் முதலான பொருள்கள் அனைத்தையும் அரசன் திருமுன்னர்க் காட்டிக் கைகுவித்து ஒருபுடை நின்றனர்.

அப்போது அரசன், 'இவர்கஒழியத் திறைகொடாதார் இன்னும் உளரோ? என்று வினவினன். அச்சமயத்துக் கடகர் முன்றோன்றி, 'பெருமானே, எங்கள் திறையும் கொண்டுவந்து விட்டோம்.' என்றுரைத்து அவன் கழல் வணங்கினர். அப்போது, 'வடகலிங்கத்தரசன் இருமுறை திறை கொணர்கிலன்' என்று அமைச்சன்கூற, அதனைக்கேட்ட அரசன் பெரிதும் வெகுண்டு 'அங்ஙனமாயின் அவனது வலியரூன்றரணம் இடிய வென்று அவனையும் அவனதுகளிற்றினங்களையும் பற்றி யீண்டுக் கொணர்மின்' என்றனன். அரசன் அங்ஙனம் கூறலும், ஆண்டு அருகிருந்த பல்லவர் கோனாகிய கருணாகரத் தொண்டைமான் 'அடியேன் கலிங்கமெறிந்து வருவல்; அடியேற்கு விடை கொடுக்க' வென, அரசனும் 'அங்ஙனமே செய்க' வென்றனன்.

குலோத்துங்கனிடத்து விடைபெற்ற கருணாகரன் நால்வகைத் தானையோடும் வஞ்சிசூடிப் போர்க்கெழுந்தனன்; எங்கும் முரசங்கள் முழங்கின; வளைகள் கலித்தன; நாற்படையும் சூழ்ந்து நெருங்கி வெள்ளத்தைப்போல் திரண்டெழுந்தன. அவற்றைக்கண்டோர் பலரும் வியப்பெய்தி, 'இவை கடலைக்கலக்குங் கொலோ? மலையை இடிக்குங்கொலோ? ஒன்றும் அறிகிலம்; இவற்றின் எண்ணம் யாதோ?' என்றையுற்று நடுக்க முற்றனர்.

நாற்றிசைகளும் அதிர்ந்தன. தூளிப்படலம் பிறந்தது. பல்லவர் கோனாகிய கருணாகரன் வளவர் பெருமானது களிற்றின் மீது இவர்ந்து இரைவேட்ட பெரும்புலிபோற் பகைமேற்சென்றனன். பாலாறு, பொன்முகரி, பழவாறு, கொல்லியெனும் நாலாறுந் தாண்டிப் பெண்ணையாற்றையும் கடந்து தொண்டைமான் படைகள் சென்றன. அதன் பின்னர், வயலாறு, மண்ணாறு, குன்றியென்னும் ஆறுகளையுங் கடந்து கிருட்டிணை நதியும் பிற்படுமாறு போயின; பிறகு, கோதாவரி, பம்பா நதி, கோதமை நதி யென்னும் இவற்றையுங் கடந்து கலிங்கநாட்டை யடைந்து, சில நகரங்களில் எரி கொளுவிச் சில ஊர்களைச் சூறையாடின.

இத்திறம் நிகழ்வனவற்றைக் கண்ட குடிகளெல்லோரும், 'ஐயோ, மதில்கள் இடிகின்றனவே; வீடுகள் எரிகின்றனவே; புகைப்படலங்கள் சுருண்டு சுருண்டு எழுகின்றனவே; அரண் எங்குளது? நமக்குப் புகலிடம் யாண்டுளது? இங்குத் தலைவர் யாவர்? படைகள் வருகின்றன; அந்தோ! நாம் கெடுகின்றனம்! மடிகின்றனம்!!', என்று ஓலமிட்டுக்கொண்டு நாற்புறமும் ஓடி அலைந்தனர். அவ்வாறு எங்கித் துணுக்குற்ற குடிகளெல்லாம், 'ஐயோ! நம் மன்னன், குலோத்துங்க சோழற்கு இறுக்கக்கடவதாகிய திறை கொடாது உரைதப்பினன்; ஆதலின் எதிரே தோன்றியுள்ளது அம்மன்னனதுபடையே போலும்; அந்தோ! இனி என்செய்வது!' என்றலறிக்கொண்டு உரைகுழறவும் உடல் பதறவும் ஒருவர்க் கொருவர்முன்னாக அரையிற் கட்டியதுகில் அவிழ ஓடித் தம்மரசனது அடிமிசை வீழ்ந்தனர். அங்ஙனங் குடிகள் தன்னடியில் வீழ்ந்து அலறி ஓலமிடுதலைக்கண்ட கலிங்கர் கோமானாகிய அனந்தபன்மன் வெகுளியினால் வெய்துயிர்த்து, கைபுடைத்து வியர்த்து, அன்னாரை நோக்கி 'யான் அபயனுக்கே யன்றி அவன் தண்டினுக்கு மெளியனோ? என்றுரைத்துத்தடம் புயங்குலுங்குற நகைத்தனன். பின்னர், 'நமது நாடு கானரண், மலையரண், கடலரண்—இவற்றாற் சூழப்பெற்றுக் கிடத்தலை அறியாது, 'அவன் படை வருகின்றதுபோலும்; நல்லது, சென்று காண்பேம்' என்று கூறினன். அம்மன்னன் கூறியவற்றைக்

கேட்ட எங்கராயன் எனும் அமைச்சர்தலைவன், அரசர் சிறுவரேனும் அமைச்சனாகிய தான் உறுதியை யுரையாதொழியின், அது தன் கடமையினின்றும் தவறியதாகுமென்பதை நன்குணர்ந்தவனாய், அரசனை நோக்கி, 'மன்னர் பெருமானே, அடியேன் கூறுவனவற்றை யிகழாது சிறிது செவிசாய்த்துக் கேட்டருளல் வேண்டும். வேற்றரசர்களைப் புறங்கண்டு வெற்றிகோடற்குச் சயதரன் படை போதாதோ! அவனே நேரில் வருதல் வேண்டுமோ? அவனுடைய படையினாற் பஞ்சவரைவுருங் கெட்ட கேட்டினை நீ கேட்டிலைபோலும்; முன்னொருநாள் அவனது படையுடன் பொருவானெழுந்த சேரர் செய்தி நின் செவிப்பட்டதில்லையோ? அவன் விழிஞமழித்ததும், காந்தளூர்ச் சாலை கொண்டதும் தன் படையினைக் கொண்டன்றோ? தண்ட நாயகராற் காக்கப்பெற்ற நவிலையின்கண் ஆயிரம் யானைகளை அவன் கைப்பற்றிக் கொண்டதை நீ யறியாயோ? அபயன் படையினால் ஆறுருற்றுத் தம்மண்டலங்களை யிழந்தவேந்தர் இத்துணையரென்றுரைத்தல் சாலுமோ? ஆதலால் அத்தண்டின் முன்னர் நின் புயவலி எத்தன்மைத்தாகு மென்பதை எண்ணித் துணிவாயாக. இன்று என்னைச்சீறினும், நாளை அச்சேனை முன் நின்ற போழ்தினில் யான் கூறியதுண்மை யென்பதை நன்குணர்வாய்' என்று நன்மதி நவின்றனன். அமைச்சர் தலைவன் கூறியவற்றைக்கேட்ட கலிங்கமன்னன் அவனைநோக்கி, 'யாம் கூறியவற்றை மறுத்துரைப்பதெனின் இமையோரும் எம்முன்னர் போதாற்குப் பெரிதும் அஞ்சுவர். பன்னாட்களாகச் செருத்தொழில் பெறாது எம்தோட்கள் தினவுற்றிருத்தலை நீ அறியாய் போலும். முழைக்கண்ணுளதாய அரியேற்றின் முன்னர் யானையொன்று எளிதென்றெண்ணிப் பொருதற்குக் கிட்டிவருதல் உண்மையாயினன்றோ அபயனதுபடை எம்முடன் பொருதற்கெழும். எமது தோள்வலியும், வாள்வலியும் பிறவலியும் இத்தன்மையனவென்றுணராது பிறரைப்போல் ஈண்டுக் கூறுதலுற்றாய். இது நின் பேதமையன்றோ? நன்று! நமது நாற்படையுமெழுந்து அபயன் ஆணையாற் போதரும் படையுடன் போர் தொடங்குக' என்றுரைத்தனன். அப்போழ்தே,

'பண்ணுக வயக்களிறு பண்ணுக வயப்புரவி
பண்ணுக கணிப்பில் பலதேர்
நண்ணுக படைச்செருநர் நண்ணுக செருக்களம்
நமக்கிகல் கிடைத்த தெனவே'

என்று எழுகலிங்கத்தினும் முரசறையப்பட்டது.

உடனே, கலிங்கர் கோமானது படைகள் போர்க்குப் புறப்பட்டன; எழுகலிங்கத்தினும் பேரொலி எழுந்தது; அடவிகள் பொடிபட்டன; வரைகள் துகள்பட்டன; கடலொலிபோல் முரசங்கள் மொகுமொகென்றொலித்தன; இடைவெளியரிதென ஒருவருடலினில் ஒருவர் தம் உடல்புக நெருங்கிச்சென்று, கலிங்கப்படைகள் கருணாகரன் படைகளின் முன்னுற்றன.

பின்னர் இருதிறத்தார்க்கும் போர் தொடங்கலாயிற்று; 'படை எடும் எடும்' என்ற ஓசையும், 'விடும் விடும்' என்ற ஓசையும் கடலொலிபோன்றிருந்தன; சிலை நாண்தெறிக்கும் ஓசை திசைமுகம் வெடிப்பதொக்கும். இருதிறப்படைகளும் எதிர் நிற்றல், இருபெருங்கடல்கள் எதிர் நின்றாற்போன்றிருந்தது. பரியொடு பரி மலைவது கடற்றிரைகள் தம்முள் இகலி மலைந்தாற்போன் றிருந்தது. யானையொடு யானைபொருவது வரையொடுவரை பொருதாற் போன்றிருந்தது; முகிலொடு முகில் எதிர்த்ததுபோல் இரதமும் இரதமும் எதிர்த்தன. புலியொடு புலியெதிர்த்தாற்போல் வீரரொடு வீரரும், அரியொடு அரியெதிர்த்தாற்போல் அரசரொடு அரசரும் எதிர்த்துப் பொருவாராயினர்; வீரர்களின் விழிகளிலே சினக்கனல் தோன்றிற்று. அக்கனல் மின்னொளி வீசின; அன்னோர் கையிற் கொண்ட சிலைகள் உருமென இடித்தன; சிலைகள் கணைமழை பொழிந்தன; அதனாற் குருதியாறு பெருகலாயிற்று. அவ்யாற்றில் அரசர்களது நித்திலக் குடைகள் நுரையென மிதக்கலுற்றன; போரில்துணிபட்ட களிற்றினங்களின் உடல்கள் அவ்யாற்றின் இருகரையென இருமருங்குங்கிடந்தன.

குருதிவெள்ளத்திற் பிளிற்றிவீழுங் களிற்றினங்கள் வேலைநீருண்ணப்படிந்த மேகங்கள் போன்றிருந்தன; அவ்யானை

களின் கரங்களை வாளாற்றுணித்துத் தம்புயத்திட்ட வீரர்கள் தோற்பைகளைத் தோளின்கண்ணேகொண்டு நீர்விடுந் துருத்தியாளரைப் போன்றிருந்தனர்; அம்புகள் தைக்கப்பெற்றுச் சுருண்டுவிழும் யானைகளின் கைகள் வளையங்கள் போன்றிருந்தன; இருதுடையும் துணிபட்டுக்கிடந்த மறவர் தம்முன்னர்ப் பொருவானெழுந்த வாரணத்தின் வலிகெட ஒரு துடையைச் சுழற்றி அதன் மீதெறிவர்; மற்றொன்றை யினியெறியுமாறு எடுத்து வைப்பர்; சிலவீரர் தம் உரத்தின்மீது பாய்வான் எழுந்த இவுளியை ஈட்டியாற்குத்தி எடுத்துத் திரிவது வெற்றிமங்கைக்கு எடுக்கப்பெறும் வெற்றிக்கொடிபோன்றிருந்தது. அன்னார் யானைகளின் மத்தகங்களைப் பிளக்குங்கால் வீழும் முத்துக்கள் அவ்வெற்றிமங்கைக்குச் சொரியப்பெறும் மங்கலப்பொறிகளை யொப்பனவாகும்; மாற்றார், சிலையில் அம்பைத்தொடுக்குமளவில் தம்மிடத்து அம்பில்லாத வீரர்கள் தங்கள் மார்பினிற் குளித்த பகழியைப் பற்றியிழுத்துச் சிலையிற்றொடுத்து விடுவர். குறைபுடலங் கூத்தாட, அவற்றின் பின்னர்க் களிப்போடாடும் பேயினங்கள் ஆடல் ஆட்டுவிக்கும் ஆடலாசிரியன்மாரை யொக்கும். சடசடவெனும் பேரொலியாற் செருக்களம், தீவாய்மடுக்கும் கழைவனம் போன்றிருந்தது.

இவ்வாறு போர்நிகழுங்கால் களப்போரினை விரைவில் முடித்து வாகைசூடுமாறு வண்டையரசனும் கருணாகரத்தொண்டைமான் தன்வேழமுந்துறச் சென்றனன். அவனது படையும் முன்னர்ச் செல்லலுற்றன; அங்ஙனஞ் செல்லவே கலிங்கப்படையின் மதயானைகள் துணிபட்டன; துரக நிரையொடு தேர்கள் முறிபட்டன; குடர்கள் குருதியின்மேல் மிதந்தன; அவற்றைக் கழுகுகளும் காகங்களும் உண்டு களித்தன; ஆயிரம் யானைகளைக்கொண்டு 'பொருவம்' எனவந்த கலிங்கவீரர்கள், தங்கள் அரசன் உரைசெய்த ஆண்மையுங்கெட அமரில் எதிர் நிற்கமாட்டாது ஒதுங்கினர்; இப்படை மாயையோ மறலியோ வென்றலறிக்கொண்டு நிலைகுலைந்து விழுந்து ஓடினர்; 'அபயம்,' 'அபயம்' என்றலறிக்கொண்டு ஒருவர் முன்னர் ஒருவர் ஓடினர்; அங்ஙனம் ஓடியகலிங்கவீரர் பதுங்கியது கன்முழையின்கண்ணே!

மறைந்தது அரிய பிலத்தினுள்ளோ! காந்தது செறிந்த அடவியிலேயோ! இவற்றை முழுதுந் தெரிந்துகோடல் அரிதாகும். அவ்வாறு கலிங்கரோடப் பலப்பல யானைகள், குதிரைகள், ஒட்டகங்கள், தேர்கள், மணிக்குவியல்கள், மகளிர்கள் ஆகிய எல்லாவற்றையும் கருணாகரனது படைவீரர்கள் கைப்பற்றினர். கைக்கொண்ட அன்னோரே அவற்றின் அளவைக் கணித்துரைப்பது அருமையெனின், மற்றையோர் அவற்றைக் கணித்துரைத்தல் எங்ஙனங்கூடும்?

இவற்றைக் கவர்ந்தபின் 'இனி கலிங்கமன்னனையும் கைக்கொண்டு பெயர்குதும்; அவனிருக்கின்ற விடத்தை யறிக' என்றனன் கருணாகரன். அவன் சொற்கள் பிற்படுமாறு விரைந்து சென்று வரைகளிலும் வனங்களிலும் தேடிக்காணப்பெறாது, முடிவில் ஒரு மலைக்குவட்டிற் கரந்திருந்த கலிங்கர்கோனைக் குறுகி 'நமது அடற்படையைக் கொணர்க' வென்றனர். எனலும் அவனைக்கொணருமாறு கருணாகரன் தன் படைஞரை ஏவினன். அவர்கள் சென்று வெய்யோன் அத்தகிரியை அடையுமளவில் கலிங்கமன்னன் கரந்திருந்த வெற்பினையெய்தி வேலாலும் வில்லாலும் வேலிகோலி விடியளவுங் காத்துநின்றனர்; பின்னர், செங்கதிரோன் உதயகிரியை யடையுமுன்னர் அம்மன்னனைக் கைப்பற்றித் திரும்பினர்.

அன்னாது வழியில் எதிர்ப்பட்ட சில கலிங்கர்கள் தங்கள் உடல் முழுவதும் மாசேற்றித் தலைமயிரைப் பறித்தெடுத்து அரையிலுள்ள கலிங்கத்தைக் களைந்தெறிந்துவிட்டு, ஐயா! யாங்கள் சமணர்கள்; கலிங்காலலேம்,' எனக்கூறிப் பிழைத்துச் சென்றனர். சிலர் சிலையின் நாணை மடித்து முப்புரிநூலாகவணிந்துகொண்டு, 'ஐயா, யாங்கள் கங்கை நீராடப்போந்தேம். விதிவலியால் இங்ககப்பட்டுக்கொண்டேம்; காந்தவாலலேம்' எனச் சொல்லி உயிர்பிழைத்தனர். குருதிதோய்ந்த கொடித்துணிகளைக் காவியுடையா வுடுத்துக்கொண்டு, தலையினை முண்டிதஞ் செய்துகொண்டு "ஐயா! எங்கள் உடையைக்கண்டவளவில் எங்களைச் சாக்கியரென்று அறிகிலிரோ?" என்றியம்பி யுய்ந்தனர் சிலர்.

சிலர் யானைகளின் மணிகளை அவிழ்த்துத் தாளமாகக் கையிற் பிடித்துக்கொண்டு கும்பிட்டு, 'ஐயா! யாங்கள் தெலுங்கப் பாணர்கள்; சேனைகள் மடிகின்ற செருக்களங்கண்டு திகைத்து நின்றேம்; இத்தேயத்தினரல்லேம்' என்றுரைத்துப்பிழைத்துப் போயினர். இவ்வாறு பிழைத்துச்சென்றவர்கள் தவிர, கலிங்க நாட்டில் உயிர்பிழைத்தவர்கள் வேறு ஒருவருமிலர்.

கலிங்கமெறிந்து வாகைமாலை சூடிய கருணாகரத்தொண்டைமான் களிற்றினங்களோடு நிதிக்குவியல்களையும் பிறவற்றையுங் கவர்ந்து கொண்டுவந்து குலோத்துங்கசோழன் திருமுன்னர் வைத்துவணங்கினன். நேரியர்கோன் பெரிதும் மகிழ்ச்சியுற்றுத் தொண்டைமானது போர்வீரத்தைப் பலபடப்பாராட்டி அவற்குத் தக்கவரிசைகள் செய்தனன். (தொடரும்.)

---

உ

# பரமோபதேசம்.

திருவாளர், L. உலகநாதப் பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

---

இது சைவசித்தாந்த உண்மை உணர்த்தும் நூல்களுள் ஒன்று; நாற்பத்தொரு குறள்வெண்பாக்களை உடையது. இதனை இயற்றியவர் மறைஞான சம்பந்தர் என்பவர். அது, இந்நூல் ஈற்றுவெண்பாவில் வந்துள்ள, 'பரமோபதேசம்-மறைஞான சம்பந்தன் வாக்கு' என்னும் சொற்றொடரால் இனிது விளங்கும். இவர், சிதம்பரத்தில் குகைமடத்தில் துறவு பூண்டிருந்த பெரியார். தென்மொழியினும் வடமொழியினும் வல்ல புலவர். தொல்காப்பியம் முதற் பல்காப்பியமும் மூவர் தமிழ் மறையும் வடநூலாகமமும் கடையறத் தேர்ந்தவர். இவற்றை இவர் இயற்றிய

“ காரூர் பொழிலுந் தேரூர் வீதியும்
வீதியின் மூவா யிரவர் விளக்கமு
மாதவர் கூட்டமு மீதுறை தில்லையிற்
கனக சபையிற் பனக முனிவனும்
போத மிகுத்த புலிக்கான் முனிவனு
மாதவ விரணிய வருமனு மிறைஞ்சத்
திருமா லயனிந் திரனிமை யோரு
மருமா மறையா லடிபணிந் தேத்தப்
பானு கம்பர் பணிலமும் வாண
னுன குடமுழ வாதியு முழக்க
மாண்டகு மதுர வாய்மொழி யிடமாய்த்
தாண்டவம் புரிவோன் சரண கமலம்
புந்தியி னுளுஞ் சிந்தனை பண்ணி
யப்பதி தன்னி லருங்குகை மடத்தி
லெப்பதி யோரு மேத்தவு மிருந்தோன்;
இகமது தன்னிற் சுகனையொப் பானேன்;
வெண்ணெயம் பதியில் மெய்கண்ட தேவன்
மண்ணிடை மீண்டு வருதலொப் பானேன்;
அருந்தமி ழுணர்வா லகத்திய முனியெனத்
திருந்துதொல் காப்பியஞ் சிவமயஞ் செய்தோன்;
ஆசில் வடநூற் போச ராசன்;
ஆதி கமலா லயமுதற் புராணம்
ஓது மதியாற் சூதனை யொப்போன்;
மூவர் முதலா முதியவர் பாடல்
ஆவ லுடனே யடங்கலு முணர்ந்தோன்;
கவமிகு நூல்கள் நானு விதத்துடன்
சிவதரு மோத்தாந் தமிழாற் செய்தோன்;
ஆகம பண்டிதன்; அருந்தவர் புகலும்
மோகமில் சாத்திர முழுது முணர்ந்தோன்;
நண்ணிய தவமறை ஞான சம்பந்தன் ”

என்னும் பதிபசுப்பாசப்பனுவற் பாயிரத்துட்காண்க. இன்னும் இப்பாயிரத்தால், இவர், கமலாலய புராணம் இயற்றியமை அறியக்கிடக்கின்றது. அதன்கண்,

" ஆண்டுகலி யுகத்துக்கு நானூற்று முப்பத்தி ராயி ரத்து
னீண்டியநா லாயிரமு மறுநூறு மெண்ணைந்து மேழுஞ்செல்லப்
பூண்டபரா பவவாண்டில்." (25)

"பொருவரிய சிவனூர் புற்றிடங்கொண் டருள்புரிந்த
புகழை யெல்லா
முரைசெய்யு மாரியத்தின் பொருடமிழா லுணர்த்துக வென்
றுரைக்கச் சொல்வாம்." (27)

எனப்பாயிரத்துக் கூறியிருத்தலின், இவர் கமலாலயபுராணம் இயற்றிய காலம் கலி. 4647-ஆம் யாண்டென்பது வெளிப்படை. இப்பொழுது நடைபெறுவது கலி. 5030-ஆம் யாண்டு ஆகும். ஆகவே இப்புராணம் இப்பொழுதைக்கு 383 யாண்டுகட்கு முன்னர்ச் செய்யப்பெற்றது எனலாம். எனவே, இந்நூல் இயற்றிய மறைஞான சம்பந்தர் கி. பி. 1545ல் இருந்தனராதல் விளங்கி நிற்றலின், இவரது காலம் பதினாறும் நூற்றாண்டு எனத் தெள்ளிதின் அறியக்கிடத்தல் காண்க.

இனி இவர் மேற்கண்ட பாயிரத்துக் கூறிய கமலாலயபுராண மும் சிவதருமோத்தரமு மல்லாது,

" நிரந்தவர் சங்கற்ப நிராகரிக்கு மிந்நூல்
பரிந்துலகோ ருய்யப் பகர்ந்தான்—திருந்திமறை
யோங்கி விளங்க வுதித்தமணி யோட்டினன்பேர்
தாங்கினனாய்ந் தாகமமுந் தான்" எனவும்,

"பரமோப தேசம்—மறைஞான சம்பந்தன் வாக்கு" எனவும்,

" முத்தி நிலையணுக்கள் சேர மொழிந்திட்டான்
சத்தியமெஞ் ஞானசம்பந் தன்" எனவும்,

" சைவ சமயநெறி சாற்றினன்சம் பந்தனுயிர்
மையலற வாய்க்க வரம்" எனவும்,

காணப்படுதலின், பதிப்சுப்பாசப்பனுவல், சங்கற்பநிராகரணம், பரமோபதேசம், முத்திநிச்சயம், சைவசமயநெறி என்னும் நூல்

களையும் இயற்றினாரதல் அறிக. இவற்றுள், முன்னரே அச்சிடப் பெற்ற சிவதருமோத்தரம், சைவசமயநெறி என்ற இரண்டும் ஒழிய, ஏனையவை இப்பொழில் வாயிலாக வெளிவரும்.

---

## பரமோபதேசம்.

---

ஆரணத்தி னுட்பொருளு மாராய்வா ரம்பவன
வாரணத்தின் றாள்கணினை வார். (க)

முத்த னணுதிசுத்தன் றாள்வணங்கி யாதிமுத்தற்
குத்தமப்பே ரின்பமுரைப் போம். (உ)

அணுதி யமலன் சிவனவன் பாரி
யணுதி யமலைபிரி யாள். (ங)

அணுதி சமல ரணுக்களவர் பாரி
லணுதிமல சம்பந்தத் தார். (ச)

ஆக்கியுட லாவிக் கறிவிப்பன் கன்மபல
நீக்கமற நின்மலனு ணின்று. (ரு)

பரிபாகத் தின்மலத்தைப் பாற்றியுயிர் சத்திக்
கருளா லிலக்குவதின் பாங்கு. (சு)

அந்தப்பே ரின்பந் திளைத்திருப்ப னுதிமுத்த
னந்தச் சிவனுடிரண் டற்று. (எ)

சிவசத்தி யைத்திளைப்ப ராதிமுத்த ரென்னு
மவசத்த மாபாத கம். (அ)

அணுதிசுத்த சத்தியிற்பே ரானந்தந் தன்னை
யணுதிசுத்த னேதிளைப்ப னுர்ந்து. (கு)

சாத்துவீ யென்றுபரா சத்திதனைச் சுரற்றுமிய
லார்த்த சிவாகமத்து ளாய். (ய)

சாத்துவீ யென்றபெயர் தான்கற் புடையளுக்கு
வாய்த்தபெய ரென்றே மதி. (௰க)

கற்புடையா ளைத்திளைப்பன் காணவள்காந் தன்னவளை
மற்றையர்தீண் டார்மன்னி னும். (௰உ)

கண்ணகைதந் தோளையவள் காந்தன் கலந்தணைவ
னண்ணவல்லார் மற்றூர் நவில். (௰ங)

அணைவன் வசிட்ட னருந்துதி தன்னை
அணையவல்லார் மற்றூர்சொல் லாய். (௰ச)

கனியினுங் கட்டிக் கரும்பினும் பத்தர்க்
கினியன் சிவனென்று றெண். (௰ரு)

சகளசிவனைத் திளைப்பர் சார்ந்தபா முத்த
ரகளனரி யானவனு மாங்கு. (௰சா)

திளைப்பர் பாமுத்தர் தஞ்சித்தின் செல்வ
மொளித்திடுநா ளண்டமற்றுள் ளூன். (௰எ)

கருத்தின் களிப்பினைக்கண் காணாது காணு
தொருத்தன்பே ரின்பமுமி ரும். (௰அ)

ஆதிமுத்த னின்பமு மனாதிமுத்த னின்பமு
மோதும் விரித்துபனி டம். (௰கூ)

கேளா யுபனிடப்பா கப்பிரம கீதையுனு
ளாளாயந் தாற்கவர்வாக் கால். (உ௰)

முத்தர்க் கனுபூதி முன்னான்கு போதத்துட்
பத்தாஞ் சுலோகத்துப் பார். (உக)

‘இருட்டறை மூலை’ யெனுமியலாள் மூலன்
றெருட்டினமூ வான்மாச்சீர் தேறு. (உஉ)

1. இருட்டறை மூலை யிருக்கு முயிர்சத்தி
இருட்டறையில் லைச்சிவசத் திக்கு. (உங)

---

1. திருமந்திரம் ஐந்தாந்தந்திரம் 17-வது சத்தி நிபாதம்.

'தாய்களா னார்பல் லுயிர்க்கு'மெனுஞ் சம்பந்தர்
வாயிலங்கு பாடன் மதி. (உச)

திருச்சிரபுரம் அன்னமென்னடை 7.

2. 'தாயவன் காணுலகுக்' கென்றார்நந் தற்பரனைப்
பாயபுகழ் நாவரையர் பார். (உரு)

3. 'தந்தைதாய் பல்லுயிர்க்குத் தாமே'யென் றார்கடவூர்
நந்திதனைச் சுந்தரரு நாடு. (உசு)

4. 'தாயேயென் றுன்றாள் சரணடைந்தே' னென்றனர்தம்
வாயான் மணிவா சகர். (உஎ)

5. 'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திற'மென்றார் பார். (உஅ)

திருவிசைப் பாவின் றலைச்செய்யு ளாயி
னொருவுங்கா ணுன்கொள்கை யுன். (உகூ)

அக்காலத் தாயே யெனவழைத்தா னன்பினா
னக்கனைநக் கீரனது நாடு. (௩௰)

தாயவ னீயாவா னென்றான் சதாசிவனை
யாயன் புகழறிவித் தான். (௩க)

6. பேசற் கரியவுயிர் பெற்றாள் பராபரையென்
றாசிலரு ணந்தியுஞ்சொற் றான். (௩உ)

ஈசன் பிதாமாதா யாமெவ் வுயிர்க்குமெனப்
பேசினன்பே தைக்கெம்பி ரான். (௩௩)

அனாதிமல முத்தன் பிதாவமலை யன்னை
யனாதிமல பெத்தர்க்கெல் லாம். (௩ச)

மைந்த ரனுபவிப்பார் மாதாத் தனையென்னு
நிந்தனைநீ சொன்னவழு நீக்கு. (௩ரு)

---

2. திருவலிவலத் திருத்தாண்டகம் 3. 3. திருக்கடவூர் மயானம் 3.
4. திருவாசகம் ஆனந்தமாலை 5. 5. திருவெம்பாவை 15.
6. சிவஞானசித்தியார் பரபக்கம் மங்கலவாழ்த்து 2.

1. எழுநான்கு 2. நான்கிறு 3. மூன்றினு மில்லை
வழுவான நின்கொள்கை வாக்கு. (௩௬)

பெருநூலி வில்லாப் பிழைபிதற்றும் பித்த
ரொருவார் நிரயத்து ளூற்று. (௩௭)

ஆதலினின் கொள்கை யவலத் தினையகற்றிக்
கோதறுமென் கொள்கையினைக் கொள். (௩௮)

விருப்பாலிந் நூலாய்ந்தார் பொய்வெறுத்து மெய்கண்
டிருப்பார் தினைத்துப்பே ரின்பு. (௩௯)

விலங்கெனத்த மூனை வெறுத்தார்க்கிந் நூலை
யிலங்கவிரிப் பார்க்காம்பே ரின்பு. (௪௰)

செறிமா செறியும் பரமோப.தேசம்
மறைஞான சம்பந்தன் வாக்கு. (௪௧)

பரமோபதேச முற்றும்.

---

1. இருபத்தெட்டு ஆகமம். 2. நான்கு வேதம்.
3. பதினெண் புராணம்.

உ

# குமரகுருபரவடிகளும் அவர் நூல்களும்.

திருவாளர், இ. கோவிந்தசாமி பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி 2-ம் துணர், 342.)

இங்ஙனமாகச் சின்னாள் அவண் தங்கிய அடிகள், அவ்விடம் விட்டகன்று விருதுகள் புடைசூழ்ந்துவர மாயூரஞ்சேர்ந்து வழிபாடு செய்து, அண்மையிலுள்ள தருமையம்பதியுளார் பெருமையொடும் எதிர்சென்றழைப்ப, ஆண்டுளார் வியப்புறுமாறு அம்மடத்தணைந்து, இருக்கையையெய்திய பின்றை அம்மடத்துத் தலைவராம் மாசிலாமணித் தேசிகர், செந்திற்பதியார் திருவருள் பெற்ற இப்பெரியார் தோற்றத்தைக் கண்டு, "ஐயன்மீர்! கல்வியுமறிவும் கடம்பணிமார்பன் திடம்படுமருளா லடையப்பெற்றவர் அன்னவன் றந்தையார் திருவடி பற்றுக்கோடாயுள்ளவர்களை வணங்க மாட்டார்கொலோ" வெனவினவலாற்றினர்.

"வள்ளிய! வெண்ணீறு சண்ணித்த மேனியாரனைவரும் வணங்கற்குரியராயினும், தூய்மைபுறு வாய்மையுடைய (ஆச்சிரம) நிலைவேறுபாட்டால் அவ்வவற்றிற்குரிய ஆணையையும் விழைவர்" என்றனர் குமரகுருபரர்.

"மனத்துக்கண் மாசில னாத லனைத்தறன், ஆகுல நீர பிற" எனக் கூறுதல் யாது கருதியோ வென மாசிலாமணியார் கூற, மனமாசறல் விளங்குந் தோற்றமுடைத்தாகாதென அம்முனிவருடன் மொழிந்தனர். காட்சி யொன்றை மாத்திரங் கருதுதல், அறுமுகப்புத்தேள் அருண்மாட்சியுற்ற நும்மனோர்க்கு முறைமையன்றே வெனத் தருமையம்மடபதி சாற்ற, செம்மை நெறியாளும் மெய்ம்மை நெறியைப் பிறழ்திய வொண்ணாத் தன்மையுடைய உடலானது அருளொடு கூடாது எனப் பெருநெறி

யாளர் பேச, மாசிலாம்மணியார், பிறாறிதலின் வருநலன் என்னை யோவென, நன்னெறியுடையார் இவரேயெனத்தேறி உலகினர் மெய்ப்பொருள் பற்றிப் பொய்ப்பொருள் ஒழிப்பான் கருதி யென வும், நீறணி மேனியரே தேறற்கரிய வேறுடை யெம்மானெனத் தன்னுட் கொண்டு, சோர் காவலரும் பிறரும், ஆலத்தடக்கிய மிடறுடைக் கோலத்தன் பதம் குறுகினர் எனவும், புகலக் கேட்ட மெய்க்குரவனார், மெய்யடியார்தம் பொய்யில் கதைபி னொரு செய்யுளாம் "ஐந்து பேரறிவும்" எனுஞ் செய்யுட்குப் பொருளை முற்படப் பகர்மினெனக் குமரகுருபரரும் நான் கூறும் பொருளினலத்தை யுள்ளவா வுணர்மினென்றார். இதன் பக்க லுள்ள (எ) செய்யுட்கள் எப்பொருட்டாலோ (பொய்ப் பொருட் டால்) பதிப்பாசிரியர் பதிப்பித்திலர். தொடர்புங் காணப்பட் டிலது. இப்பெற்றியை ஆய்வு முற்றுகையி லெடுத்துரைப்பாம்.

இன்னண நிகழ்ந்த பின்றை, மாசிலாமணிப் பெருந்தகை யார் அம்முனிவரரை நோக்கி எங்கள் ஆரியன்மேல் யாங்க ளெப்போதும் உங்கள் பேரருளாற் றுதித்தற் பொருட்டு அருள் புரிந்து ஒருநூல் செயல் வேண்டுமென, விழைந்தாங்கு மும்மணிக் கோவை யொன்றியம்பி, ஒன்றுமாத் துதித்திருமின் என்றவர் காத்துதவிச் சென்று அயலிலுள்ள வடமடம் புக்குப் பூசனை செய்து அவண் சில்பகல் கழித்தனர் அடிகள்.

அம்முனிவரர் உடனிருந்து உண்ணும் பெருமையும், அம் மாசிலாமணிக்கு அன்பு மீக்கூர்ந்தமையா னெய்திய பின்னிறப் பங்குனியுத்தரத்தன்று ஆரூர்ப் பெருமானைக் காண விழைவுற்று அவ்வூரணைந்தனர். அணைந்த ஞான்று மெய்புருவுடைய செய்ய வர் பல்லோர் எதிர்கொண்டேத்த, அருட்டிருவுடைய ஐயன் கிண்கிணிக்கால் அழகினைக் கண்ணாரக்கண்டு, அன்னவர்க்கே திருவாரூர் நான்மணிமாலை யெனப்பெயர் சூட்டி ஒரு சிரிய நூலுங் கண்டனர்.

பின்னொரு பகலில், நூலுரை நவலு நோன்மையாளர் ஆகிய அவ்வடியர்பால், சமயவாதர் பலர் குழீஇத் தருக்கித்துரைத்து

வாதாடா நிற்ப, அன்னார் அகவிருளொழித்துத் தெருட்டிப் பின்னிடுமாச்செய்து, அப்பதி விட்டரிதினகன்று, நெறியிடைப் பட்ட அறவுருவன் ஆலயத்துட்புக்குக் கண்ணாரக் கண்டு, கடுவினை யோட்டுங் கடுக்கண்டனாரைப் பல்லாற்றானும் துதிபலபுரிந்து, புள்ளானூர்க் கரையனிடமாம் புள்ளிருக்கு வேளூரை, தெள்ளு தமிழ்மறைப் பொருளார் நள்ளிய கோயிலை யடைந்து, தைய னாற்றலைவி யாரையும் மருத்துவத்தலைவரையும் (வைத்தியநாதரை யும்) முத்துக் குமரனையும் முறையுறு நெறிகொடு வணங்கி, முத்துக்குமாரசாமிக்குப் பிள்ளைக்கவியொன்று புனைந்தணிந்து சின் னாள் அவணிரீஇப் பின்றையோர்நாள், பெரும்பற்றப் புலியூரே பெரும்பற்றெனக் கொண்டு சென்று, அம் மன்றுளார்க்கு மும் மணிக்கோவை யொன்று செம்மையுறக் கோத்துத் தரித்து, நீறுடையையர் சிலர் கூறியாங்கே, எத்திறத்தினும் மெய்த்திறம் பயக்கும் செய்புட்கோவை யொன்று பாடிமுடித்து, ஆயிரக்கால் மண்டபத்திடை யமர்ந்திருக்கு நாளில் ஓர் நாள் மாயாவாதியர் பலர் ஒருங்குகுழீஇ வாதிட, தேனருவி தாழும் செந்தூர் வெற் புறை யாண்டவன் அடித்தொழும்பராம் அடிகள், சின்மென் மொழியால் பின்னிட எதிர்மறை வாதியரை யுடன்பாட்டு வாதிய ராக்கினர். முருகப் பெருமான் றிருவருள் முற்றிய பெற்றி யார்க்கு ஈதுமோரரிய செயலாமா!

அப்பெரியார், காட்சியவான் மாட்சியவான காட்சியுந் தந் தருள் பெரும்பற்றப் புலியூரினின்றும் அரிதினிலொருவி, எழ் பெருங்கடலும் இருபெருங்கடலாக வெண்ணெயும் பாலும் பெரு கும் பண்ணையங் காட்டுறு பெருவள நிரம்பும் பெண்ணைசூழ் வெண்ணெய்நல்லூர்ப் பெரும்பதி தொடங்கித் தம்மைச்சூழும் அடியர்குழாத்தொடும், இருபுறமொத்த பெருவன்புடன் நெறி யிடைப்பட்ட நின்மலன் ஆலயம் (வினையினீங்கி விளங்கியவறிவன் கோயில்) பலவும் புக்குக் கண்டு வணங்கி யேகுகையில் ஆற் றிடைப்பட்ட போற்றரும் எற்றாம் அரயர் சிலர் பலவரிசை யொடும் எதிர்கொண்டழைப்ப அன்னவையேற்று, அவருளம் அளவிலாக் களிப்பெருக்கிடைக் கிடப்பச் சின்னாளவட்டங்கிப்

பின்னர், பிறவிப் பெருமாசு அறவே போக்கும், காசிப் பெரும்பதி புகுவான், தெலுங்கம், கருநடம், விராடம் முதலிய பலநாடு கடந்து அவிமுத்த வாணருறையும் வாரணவாசி வந்தண்மினர். பனிமால் வரையினின்றிழிதரும் பன்னருஞ் சிறப்புறு தூய்மைய வாகிய புகழ்தங்கு கங்கைப் பெருநீர்பாயும் பொங்குவளமுற்றது இவ்வவிமுத்தமென்னில், அந்நகருறு காட்சியை யெங்ஙனே வியம்பலுறும்? அண்மியவடிகள், அந்நகர்க் காட்சியைக்கண்டு, அக்கங்கையின் இருகரைப்பாங்கரும் பொருவிலாத் தவநெறிச் செல்வரும், தவத்துயர் பெரியரும், தவத்துறை மாக்களும், ஒருங்கு குழீஇ எல்லாம்வல்ல இறைவனற்றாளை, பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய் முற்ற வாலுணர்வு முடுக, பிறவிப் பெருங்கடல் கடக்கும் பெரும்புணையென உள்ளவாத் தேறி ஒருப்படுமுளத்தினிலிருத்தி உறங்காதுறங்கி உறைபவ ராதலையு முற்றுநோக்கி, அப்பெருநதியிடை இருபுறமாசு மெளி தினிற் கழிப்பப் படிந்து, விண்ணவரும் மண்ணகத்தே எண்ண ருஞ் சிறப்புற புண்ணியப்பதி யிப்பதியெனக் கருதிப்போந்து வழிபாடாற்றும் கழிபேருவகைக் கடிநினிற்றந்தருள் உலகுரு வானேன் (விச்சுவநாதன்) இலகுறுங் கோயிலிற்புக்கு, அன்பினை யடைக்குந் தாழைத்திறந்து இருகையையும் திருமுடிமேற்றாக்கி அன்னவன் றாளை யுள்ளவாறு உளத்தினிலிருத்திப் பணிந்தனர்.

அக்காலைத் துண்டிவிநாயகருக்குத் தண்டமிழ் மணங்கமழ் பதிகமும், உலகுருவானேற்குப் பதினெட்டுறுப்பும் பாங்குபட நிறுவும் கலம்பகமும் ஆயவிவ்விருநூலும் நூற்றுச அறுமுகவன் நாடு மண்ணலாம் ஐயன், தாம்தங்கிய இத்தலத்திடை ஒரு மடங் கட்டுவித்தல் வேண்டுமெனத் தன்னுட்கொண்டு, நன்மடம் ஆற்று தற்கு, அந்நகராளும் அரசனை யணைந்துகொளல் நன்றெனக்கருதி ஆண்டேவதிந்தனர்.

அப்பதியாளும் அரசர் துருக்கராயினமையால், அப்புரவல ரூர்தம் மொழியே நன்குதெரிந்து உறுதியெய்துமா வுணர்த்தலா மன்றி அவ்வரசர்க்குப் பிறவாற்றான் ஆகாவெனத்தேறி, நற்பல கலைகட்கும் நாட்டமுறு நாமகளார்மீது வாடாமாலை யொன்று

பிடுறவணிந்து அவ்வரயர்மொழி தமக்கு வருமா வேண்ட, அவ் வம்மையார் அருள் மருளறப் பொங்கியதால், அப்புலவர்பெரு மகனுர்க்கு அரயமொழி வந்தடுத்தது.

அம்மொழி கைவந்த மெய்ந்நெறியாளர், அக்காவலன் மருங் குற்று, தன்னுட்கோளை யன்னவன் றடையின்றி யொப்பச் சுருங் கச்சொல்லல், விளங்க வைத்தல் துலங்கிய வனப்புடை விரிவுரை சினமுறுநிலையுளார் சினமறவேயாற்றி யம்மன்னனைத் தன்னகப் படுத்தி அவ்வூரினிற் றன்னெண்ணப்படியே புண்ணியத்திருத்தளி கட்டுவித்து, அம்மடத்திற்காஞ்செலவிற்குரிய பொருளும் உதவ மன்னவனுர், தாம் மடத்தினிலமர்ந்து அறம் ஆற்றுவாராயினர்.

செவிக்குணவுமஃ தில்லாதபோழ்தத்து, அதுகானுமிருந்து கேட்டற்பொருட்டு, வாயுணவும் தந்து, அகவிருளைப் பகலவனைப் போலப் பறக்கடித்தும் வாழ்வாராயினர் வாரணக்கொடியுடை வள்ளனற்றுள்புனை கள்ளமில் சிந்தையார்.

பங்கமிலாத் திங்களணிந்த செஞ்சடை வானவனுராகிய திருக் கேதாரநாதர் அத்தவமுயர் பெரியர் கனவினிடைத்தோன்றி, நாம் "அணுகற்கரிய காடுகளிடைப்பட்டு நெருங்க மறைந்தேம், நீர், அக்காடு போக்கி யாவரு நாடுமாக் கோயிலொன்று கட்டித் திருத்துவி" யென உணர்த்த உணர்ந்த பெற்றியார், அடர்வனம் நாப்பண்மறைந்த ஐயன் பணித்த பணியே பணி யெனக்கொண்டு பலரொடு சென்று காடுகெடுத்துத் தேடற்கரிய செழுமணியை நாடிக்கண்டு, அப்பெருமாற்குச் சீரியஅணியொடுசெறிந்த கோயி லொன்று செப்பமுறச்செய்து, செப்பமுறச்செய்த கோயிற்குச் சிறப்பொடுபூசனை செல்லுமாவாற்றிப் பலபடியாக நாவாரப் புகழ்ந்து ஆண்டு வேட்கையொடு மேவினர்.

இங்ஙனம் அப்பெரியார் தங்க, உயர்வுற அவ்வூராளும் அரயன் பேரன்பு அன்னவர்பான் மீதூரக்கண்ட மன்னவனுசிரி யாராயுள்ள தருக்கரனைவரும், திருச்செற்றுத் தீயுழியுய்க்கும் அழுக்காறெனுமொரு பெரும் பாவியாற் பற்றப்பட்டு அரயன்

பக்கலை யண்மி, "பேணலாரியாரும் நாளலர் புரையும் நின்னடிகளைப் பேணிச்சூட அறச் செங்கோல் திறம்பட வோச்சும் இறைவ! தென்னாட்டினின்றும் இந்நாட்டை யெய்தினார் நின்னாட்டவருள் பெற்றவராயினும், அன்னவர்கொண்ட கடவுள் பொய்க் கடவுளே" யெனப் பலவாறாகப் பிதற்றி யரயனைச் சிறந்த நெறியுடைச் செல்வரை நன்காராய்வான் வேண்டினர்.

வேண்டப்பட்ட வேந்தன் தன்முன்னர், இயல்பினெழுந்து போந்த எழில் நலங்கனிந்த முருகனார் மாணவருக்கு முகமனுரை மொழிந்து, இருக்கையுதவி யிருக்குமாச்செய்து, எம்மாசிரியர் இயம்புமொழிகளை யிசைந்து கேண்மினென, அப்பெரியார், அவ்வாசிரியரை நோக்கி, உங்கள் கூற்றினைக் கூறுமினென, அன்னவர், அடிகளைப் பார்த்து. "நீவிர் கொண்டுள தெய்வம் பொய்யே, மெய்யேல், அங்கையின் அனலுறுவேயும் இரும்பைத் தாங்குமின்" என்றனர்.

அழுக்காறுற்ற அகத்தாராய ஆசிரியர் அறைந்த கொடுமொழிகளைச் செந்நெறிநின்ற செம்மனத்தார் புன்னகைபூத்து நவ்வியங்கரத்து முக்கணயனார் உண்மை ஈண்டுற்ற கோடிய மன்த்தர் கோடுமாச் செய்து விளக்குவேன் எனத் தன்னுட்கொண்டு, அரயனை நோக்கி, 'நீ, கண்டாரஞ்ச இருப்புக்கட்டிதனை நெருப்பிடைப்புகுத்திக் காய்ச்சி வருவி' யென, அவன் ஆணையால் வந்த வெந்தழற் கட்டியினை அரயனையுள்ளிட்டாரியாவரும் அகங் கொதித்தஞ்ச விஞ்சிய வீறுடைச் சிங்கவேறனார் எழுந்து நின்று, அவையுளாரைப் பார்த்து, "குற்றமற்ற வேதம், ஆகமம், விளம்புமுறையே பேரளவை; சைவசமயமே மெய்ச்சமயம்; ஊர்தியுங் கொடியுமாவுடைய எற்றவனே நாடற்கரிய பிரமம். ஐந்தெழுத்து, நீறு, அக்கமணி யிவைகளே சாதனம். சரியை, கிரியை, யோகம், ஞானம், என்பனவே நால்வகை நெறி. இரண்டறக் கலத்தலே முத்தி; அளவிடற்கரிய உயிர்களுய்ய எடுத்தருள் வேடமே கைலைமலையிலுறை கண்ணுதலானடியவர் வேடம். நாடற்கரிய நடுநாட்ட நாயகனடிகளைப் பற்றி வழிபடும் கடமை பூண்டோரே பிறவிப் பெருங்கடல் கடப்பவராவர். இறையெனும் பெயர் தமக்

கேபுடைய எம்மானுக்கு, என்றும் பிரமனையுள்ளிட்ட பெருந்தேவரே வழிவழியடிமை. கல்லாடைதரித்து நெறி பிறழாது செந்தூர்ப் பெருமான் மாணவனாய், யான் ஆற்றிவரும் அறம் நாளுந் தழைத்தல், இறைவன்நற்கோயிற் பொருளில் இறையளவுங் கருதேன் என்றிவை யுண்மையாயின் இச்சுடர் மழுவென்னைச் சுடாதொழிக" வெனக் கோள்கூறி, நான்முகனும் அறியா நம்பனே மெய்யென்று அவையினுள்ளார் வியப்ப அகங்கையி லேந்தினர்.

இப்பெற்றிகண்ட வுடனே மன்னவன் முதலியோர் நடு நடுங்கி, உலகமுய்யவந்த அப்பெரியாரடிகளில் பலபடியாக உயர்வுறு மொழி யுரைத்து எல்லாம்வல்லஇறைவனுஞ் சிவபெருமானே தெய்வமன்றி வேறிலையென்று மேதக்க யாருந் தேர்ந்தனர்.

அக்காலை, அழுக்காறெனும் பெரும்பாவியாற் பற்றப்பட்டோர், அரயனார் நம்பாற் பற்றின பற்றற்றதே யெனப் பெருநாணினராயினர். அரயனும் கையிற் பொறுத்த கனன்மழுவினை கிழக்கிடுமா அடிகள் பாலிரப்ப அதனை அன்னணஞ் செய்து மன்னவன்தந்த பன்னருஞ் சிறப்புறு வரிசையொடு தம்மடத்துப் பருதியினும் விளக்கமுற்ற பண்பினர் நண்ணினர். முன்னையினும் அரசன் செல்வ நனிதரப்பெற்று உவகையொடு நின்று எண்ணுன் கறமும் எண்ணமையினியல ஆற்றியமர்ந்த பெரியார் அரன்றனக்குரிய சாதனப்பொருளின் ஒன்றாய அக்கமணி விளையும் பூமியுங் கோடல் நன்றெனக்குறித்ததைக் கேட்ட வாகீசமுனிவரென்பார் ஆண்டகன்று முகாங்கிமேவி மடமொன்று கட்டினர். இன்னணம் ஆற்றுமா செய்த அறப்பெருந்தலைவர் தமக்குப்பின்னரிருந்து நல்லறம் ஆற்றிவரும் நலமுளார் யாவரென்றுன்னி, தமக்கு உள்ளும் புறமுமொத்தவன்புடன் வழிபாடாற்றும் பொலிவுளாரில் மாட்சியுற்ற சொக்கநாதமுனிவரென்பாரைச் சிறப்பித்து, அன்னவர் தமக்குத் தீக்கையாதிய பொருந்தச்செய்து, குமரப் புத்தேளுண்மையுந் தெளிவித்து, யானீட்டிவந்த அறச்செயல்களுறச் செய்வாயென நல்லுரை நவின்று, சொக்கலிங்கப் பெருமானையும் கயற்கண்ணுளையும் செவ்வேலுடை செவ்வேளாரையும் அன்பு

பெருகப் பூசிக்குமா எழுந்தருளுவித்து வைகாசித்திங்கள் தேய்பிறை மூன்றுநாளன்று செந்தூர்ப்பெருமான் சேவடிகளையே நினைந்து, தொன்றுறு களிம்பிலாச் செம்பொன் வண்ணமாந் திருவடித்தாமரைகளி லொன்றி யொன்றுது மேவி யுலப்பிலா இன்ப முற்றனர் என்பர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்.

தொடரும்.

---

சிறுவர்க்குரிய பக்கங்கள்.

உ

# முருகன் சிறுவிளையாடல்.

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

## 1. பொறியெனத் தோன்றிப் பொய்கையிலாடல்.

"முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப்
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியன்"

என மறைபேசும் இறையவனாகிய சிவபெருமான், தமிழ் தழுவிய இன்சொல் இமவான் மடந்தையொடு, ஊழிதோ றோங்கி ஒள்ளொளி விரிக்கும் வெள்ளியம் பொருப்பில், அரியணைமேவி இனிதுவீற் றிருக்கையில், விண்ணவரும் அன்னவர் வேந்தனும் வந்தடிவணங்கி, 'முதலு நடுவுமில்லா அண்ணலே! நீக்கமில் இன்பருளும் தூயவ! யாங்கள், அவுணர் விளைக்கும் துன்பநீங்கி, முன்னையிற் போல இன்புற அருளுக. தேவரீர், இமயம் சென்று உமையை மணந்தது, தீவினையிற்பட்டு வருந்தும் எம்மை ஆளுதற்கு ஒரு செம்மலை அளித்தற் கன்றோ? எந்தாய்! நினக்கு

விருப்பும் வெறுப்பும் இல்லையெனினும் எம்பொருட்டாக, நின்னை நிகர்த்த தன்னிகரில்லாத ஒரு மகனை நின்பால் நீ தரல்வேண்டும்' என்று வழுத்திட, 'உங்கள் புந்தியிற்கொண்ட புன்கணை ஒழிமின்! புதல்வனைத் தருதும்' என்றருளி, அந்திக்கு நிகராய திருமேனியுடைய அண்ணல் அறிஞர் சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறுங்கொண்டான். அதனை விண்ணவர் கண்டு நெஞ்சு துண்ணென நிற்குமளவில், திருமுகந்தோறுமுள்ள நுதல் விழி ஒவ்வொரு தீப்பொறியை நல்கிற்று. அப்பொறிகள் ஆறினையும் அமர்ந்து நோக்கிய அம்மான், காற்றையும் கனலையும் நோக்கி, 'ஆற்றலை உமக்கு அருளினேம், நீவிர் இச்சுடர் ஆறையும் சுமந்து சென்று வீங்குநீர் விண்யாற்றில் விடுத்திர். அவள் அன்னவைகளைச் சரவணத்துய்ப்பள்' என்றருளினன்.

அவ்வொருவனது ஆணையை மேற்கொண்ட தீயின்பண்ணவனும் ஊதைக்கடவுளுமாகிய இருவரும், அம்மூவிருபொறிகளையும் முறைமுறை முடியிற்சேர்த்து உடல் வேர்த்துப் புழுங்குறமெலிவிற்றுங்கி வல்லையிற்போய்க் கங்கையில் உய்த்திட, அன்னவள் அவைகளைச் சென்னியிற் சுமந்துபோய்ச் சரவணப்பொய்கையிற் சேர்த்தனள். உடனே,

> " விண்ணிடை யிழிந்த காலின் மேவரு கனலிற் றோன்றும்
> வண்ணவொண் கமலஞ் செய்ய முளரியை மாறதாகத்
> தண்ணளி யோடு நல்கித் தரித்தெனச் சரவ ணப்பேர்க்
> கண்ணகன் பொய்கை யீசன் கட்டழன் மிசைக்கொண்
> டன்றே "

தன்னை நல்குந் திசையை, இயல்புக்குமாறுகத் தான் நல்கித் தன்மேல் சுமந்தது போலச் சரவணப்பொய்கை தன்மிசைக் கொண்ட ஈசன் கட்டழல், அளவிலின்பம், இயற்கையறிவு, தன்வயமுடைமை, பேருளுடைமை, முற்றுமுணர்தல், வரம்பிலாற்றல் என்னும் ஆறு குணங்களும் ஆறு திருமுகங்களாகப் பன்னிரண்டு திருக்கரங்களோடு ஒரு திருமதலையாகத் தோன்றிற்று.

இவ்வாறு சரவணப் பொய்கையில், ஆறுமுகமும் பன்னிரண்டு கையுங் கொண்ட இளஞ்சிறுமதலையாகத், தாமரைப் பாயலில், எம்பெருமான் இனிது வீற்றிருப்பக்கண்ட திருமால் முதலிய வானவர்கள், கார்த்திகைத் தெரிவைமார் அறுவரையும் விளித்து, இங்குக் கைக்குழவிபோலத் தோற்றிய இம்முதல்வனுக்கு உங்கள் பாலமுதூட்டிப் போற்றுதிர்' என, நன்று எனப்புகன்று பொய்கையை அடைந்த ஆரல்மாதர் அறுவரும், 'அறுமுகங்கொண்ட ஒரு சிறுகுழவிக்குப் பாலருத்துவது எங்ஙனம்? ஆறு குழவியாக இருப்பின் ஒவ்வொருவரும் எடுத்துப் பாலூட்டுதல் எளிது' எனத் தம்மனத் தெண்ணினர். மனத்திருந்த கருத்தறிந்து முடிப்போனாதலின், அவர் மனங்களிப்ப அறு சிறுர் உருக்கொண்டனன் ஐயன்.

பொருள் நீர்மையால் ஆறுருக்கொண்ட அண்ணலை, மங்கையர் அறுவரும் மகிழ்ந்து வேறுவேறு தாமெடுத்துத் தத்தம் பாலமுதினை அருத்திட, அவனும் முறுவல்செய்து ஆற்ற வருந்தினன்போல அருந்திய பின்னர்த் தாமரைப்பள்ளியில் கண்வளர் நீர்மையனாய், ஆடல்புரிவா னாயினன்.

"துயிலவோ ருருவந் துஞ்சித் துண்ணென வெழுந்து மென்சொற்
பயிலவோ ருருவம் யாய்தன் பயோதரம் பவள வாய்வைத்
தயிலவோ ருருவ நக்காங் கமரவோ ருருவ மாட
லியலவோ ருருவம் வாளா விரங்கவோ ருருவஞ் செய்தான்."

"ஒருருத் தவழ மெல்ல வோருருத் தளர்ந்து செல்ல
ஒருரு நிற்றல் செல்லா தொய்யென வெழுந்து வீழ
ஒருரு விருக்கப் பொய்கை யோருரு வுழக்கிச் சூழ
ஒருருத் தாய்கண் வைக வொருவனே புரித லுற்றான்."

"ஆடவோ ருருவஞ் செங்கை யறையவோ ருருவ நின்று
பாடவோ ருருவ நாடிப் பார்க்கவோ ருருவ மாங்க
ணோடவோ ருருவ மோர்பா லொளிக்கவோ ருருவம் யாண்டுந்
தேடவோ ருருவ மாகச் சிவன்மகன் புரித லுற்றான்."

## 2. மகவின் விளைத்த மகிழ் செய்யாடல்.

இத்தன்மையாக, ஒரு கணப்பொழுதில் பத்துநூறுய வகைப் படும் வித்தக விளையாட்டினைச் செய்துலவும் சேயினைத், தன் இருகரங்களால் அன்புடன் எடுத்துத்தழுவி, ஓராறு திருமுகமும் ஈராறு திருக்கரமுமுடைய ஒருருவாக உமைய்ம்மை செய்தபின்னர், அருள் நீர்மையால் ஆடல்மனங்கொண்ட அண்ணல், திருவடியிற் கழலும் தண்டையும் சதங்கையும் சிலம்ப, அரையின்கண் கிங்கிணி கறங்கக், காதிற் குண்டலமும் மார்பில் மதாணியும் நுதலில் வீரபட்டிகையும் மின்னக், கட்டழகு தோன்றுமொரு காணியோ, அன்றேல் கட்டழகு கொண்ட இளங்கோலமோ எனக் கண்டவர் கூற நடந்து, தென்றல் தவழும் சோலையினும், மன்றல் கமழும் பொய்கையினும், தீண்டேன் நுகரும் வண்டு போலச், சென்று சென்று உலாவுவன். புதுப்பூங் கடம்பமர் கானினும், ஆதீண்டு கந்துடைநிலையினும் களிற்றிளங் கன்றென இயங்குவான். கோளரிக் குருளைபோற் குன்றிடை இவருவான். குளத்தினும் யாற்றினும் குறுகுவான். செந்தமிழ் மணக்கும் தேஎந்தொறும் திரிகுவான். வடகலை பயில்வார் வாழிடம் படர்வான். நிலத்திற் செல்வான். விண்மிசை எகுவான். தண்மதி வாழும் இடத் தியல்வான். வெய்யோன் மேவிடம் விரைந்து போவான். நாண்மீன் கோண்மீன் நகுமிடம் புகுவான். தந்தையுமாயுமமர்தலந்தொறு மேவுவான். வானவர் சித்தர் கருடர் கந்தருவர் ஏனையர் உலகங்களில் எகி மீளுவான். இளைஞனென்னவும் காளைபோலவும் மறையவர் மானவும் முனிவர் எனவும் வருவான். வில்லுங் கணையுந்தாங்கி வீரனென்னத் திரிதருவான். காலாற் கடப்பன். கொய்யுளைப் பரியினும் கொடிஞ்சியந் தேரினும் கடகரி எருத்தினும் எறுவான். திருகு மருப்புத் தகரினும் பெயர்வான்.

குலகிரி அனைத்தையும் ஒருபாற் கூட்டுவன். பின்னர், அவற்றைத் தலைதடுமாறத் தரையிடை நிறுவுவான். ஒலிகடல் முழுமையும் ஒன்று படுத்துவன். வாளகிரியை ஆழுமாறு நிலவரை அழுத்துவன். அங்கு வாழும் பணிகளைப்பற்றி மேரு முதலாய மலைகளிற்

பிணித்துச் சிறுதேராகக் கொண்டு உருட்டுவன் 'ஒரு திசை யானையை மற்றொரு திக்குவேழத்தோடு பொரவிடுவான்' கங்கை நீரை அள்ளியூற்றிக் காய்சின வடவையை அவிப்பன். கலுழனைப் பற்றி வாசுகிபால் விடுத்து இகல்விளைவிப்பன். செங்கதிரவனை வெண்மதி உலகினும், தண்மதிதன்னை வெய்யவன் உலகினும் செல்லுமாறு எடுத்து ஓச்சுவன். எண்டிசை புரப்போர் இருந்த இடங்களைப் பறித்துப் பண்டைய திறத்தின் நீங்கிடப் பிறழ வைப்பன். கதிரவன் திங்கள் கோள் என்றின்னவரின் ஊர்தி தேர்களைப் பிணித்த துருவன் பற்றிய கயிறுகளில் வேண்டு மவற்றை இடைக்கண் ஈர்ந்து வானியாக விண்ணில் விடுவான். வானவில்லினைப்பற்றி வளைத்து, உடுத்திரளை உண்டையாகக் கொண்டு, வானவர் முடி, தலை, தோள், மார்பு, முகங்களைக் குறியாக எய்து, வில்விஞ்சை காட்டுவான். உருமுப்பற்றி மின்னிற் பிணித்து, வண்டுறாத செந்தண்மாலை செய்தணிகுவன்.

பாடின்படுமணி இரட்டுவன். சுழலினை ஊதுவன். கோடு குறிப்பன். வீணை பயிலுவன். சிறுபல்லியம் எழுப்புவன். எவரும் நாடும்படி பாடி யாடுவன்.

## 3. விண்ணவரை அமரில் அட்டாடல்.

இத்திறம் ஆறிருதடந் தோளண்ணல் எண்ணிலா ஆடல்புரிந்திருப்ப, அன்னவனைக் காணாமையால் தம்மனத்துப் பலதிறப்பட எண்ணி இடருறும் இமையவரும் இந்திரன் முதலியோரும் மேருமலையிற் கூடி, 'வானுலகமும் மண்ணுலகும் தொன்னிலை திரிபுறச் செய்தார் எவரோ தெரிந்திலம்; அவுணர் ஈது புரிகலர்; இது புகுந்தது எவ்விதம்?' எனத் தம்மில் உரைசெய் திருக்கையில், வானவர் வாட்டம் ஒழிதரத் தன்செயல் காட்டிய வந்தோனாகிய கந்தன், ஒருமுகங் கொண்ட ஓரிளங்குழவியாய், அன்னவர் கண்களில் தெரியத்தோன்றி, மால்வரை அசைத்து, மரையிதழ் கொய்து சிந்தும் மாட்சியிற் குவட்டினைப் பறித்து வீசிக் குலவினன்.

அண்டரும் அண்டர்க் கரசன் முதலிய அனைவரும் கந்தனைக் கண்டனர். கானில் திரியும் அரியைநேர்ந்த விலங்கெனக் கலங்கினர். 'அன்னோ! வானும் நிலனும் திரிபுறச் செய்தோன் இவனே யாவன். இளங்குழவியென இவனை எளிதாக எண்ணலாகாது. ஆராயின் அவுணர் யாரினும் வெய்யன். அன்றியும் எவரும் எய்தாத பிராயமுமுளன். ஆதலால், வெம்போர்ச் செய்து இவனை வெல்வோம்' எனத் தேர்ந்தபொழுது இமையவர்க் கிறைவன் போர்க்கோலமெய்தி ஐராவத மேற்கொண்டு, வானவரோடும் போந்து வளைந்துகொண்டு போர்தொடங்கவும், முன்னலம் தருதற்கெழுந்த தன்னை ஒன்னலனெனக் கருதிய அன்னவனது அறிவின்மை கண்டு நகைத்து, அவனை ஓர் பொருட்படுத்தாது முன்னையிற்போலத் தன்னாடல் இழைத்திருந்தனன் முருகன்.

கண்டனன் வேள்விக்கிறையவன்; கனன்றான்; கடவுட் படைகடம்மைத் தொட்டான். தொட்டவை யாவும் போதுகள் பட்டென முருகன்மீது பட்டுவீழப் பதைத்தான்; வச்சிரத்தை விட்டே தெழித்தான். அஃதும் எந்தைதன் மார்புநண்ணி அயிர் போல நுண்டுகளாக, நோக்கித் துயருற்று நின்றான்.

அப்பொழுது ஐராவதம் முருகேசனை முடுகிச்செல்ல, அவன் வில்லுங் கணையும் ஒல்லையின் மனத்தால் நல்கி, நாணொலி செய்து வில்லை வணக்கிக் கோலொன்று தொடுத்து அவன் நெற்றியிற் செல்ல வுய்ப்பப் புலம்பி வீழ்ந்து உயிர்துறந்தது வேழம்.

வேழம் இறந்திடக்கண்ட விண்ணவர்கோன், வெகுண்டு தன்சிலையை வாங்குமுன், அண்ணல் எய்த கோலொன்று அவன் மொய்ம்பிற்பட்டுருவிட வருந்திப் பொருவன்மை சிந்திக் கைச் சிலையைப் போகட்டு, வேலை யெடுத்துக் குகன்மீது விரைந்து விட்டான்.

அது, நொய்ய சிறு புற்படுந் தன்மையிற்பட்டு வீழக், கந்தன் சிலையை வளைத்துப் பூட்டி ஒரு கணைவிடுத்து அவன்றன் அம் பொன்முடி தள்ளி, மற்றொரு கணையால் கொடியினைத் துணித்துப்

பின்னொரு கணையால் மெய்யுறை (கவசம்) தனைத் துகள் கண்டு, பாழியந் தடமார்பிடை எழ்கணை தூண்டிட அயர்ந்து வீழ்ந்தனன் மகவான்.

அயிராணி கேள்வன் மயக்கமுறவே, விளைவுதேராத விண்ணவர்கள் குகனை வளைந்து பொருமெல்லையில், கைச்சிலை குனித்து நாற்கணை தூண்டிக் கடற்கிறைவனை வீட்டி, ஐவாளி தொடுத்து எமனாற்ற லடக்கி, ஈரம்பு விடுத்துக் கதிர்தன்னையும், ஓரம்பதனால் மதியத்தையும், எவுமூன்றாற் கனலோனையும், இரண்டு கூரம்பதனால் மருத்துதனையும் வீட்டிப் பொருது வீழ்ந்தார் ஒழிய, நில்லாதுடைந்தார் நீங்க நேரில் வில்லாளியாகிய விசாகன், யாவரையும் அட்டுலவும் ஈசனென்னப் பொருகளத்தில் தனியே உலாவி நின்றான்.

இந்நிகழ்ச்சியை நாரதன் கூறக் கேட்ட வானவர்குரவன் வியாழன் என்போன் 'இமையவர் வாழ்வு இற்றதேகொல்' எனத் துயருற் றெழுந்து, அண்டர்க் கிறைவனும் எண்டிசை புரப்போரும் இறந்துபட்ட களத்தினைக் குறுகி, எழுதற் கரிய எழில் தாங்கிக் குழவிதன் உருக்கொண்ட கோவினை நோக்கித் தொழுது நின்று துதித்து, 'கோடலும் குரவும் சூடிய குமர! நின் தொழும்பு செய்திட நின்னை நேடுறும் இந்திரன் நீ இத்தன்மையின் ஆடல் புரிவதை அறிந்திலன். மறை முதல்வனும் அம்மையும் அன்னவர் அருள்பெற்ற சிலருமல்லது உனது ஆடலை அறிந்திடவல்லார் யார்! வினைத்தொடக்குண்ட சிற்றுணர்வுடைய யாமெல்லாம் உனதாடலை முற்றுணர வல்லேமோ? ஆதலால், வானவர்க்கரசன் அறிவின்மையின் உனதாடலைத் தீதெனவுன்னிச் செருவினழைத்தனன். நீயும் தக்கதோர் தண்டமேபுரிந்தனை. மற்றைய தேவரும் அறிவின்மையால் மலைந்து மாய்ந்தனர். பெற்றவர்தாமே குற்றஞ்செய்த தம்மக்களைக் கொல்வாரெனின், அவர்க்கருள்செய்வார் வேறு யார்? அருட்பெருங்கடலே! இவ்வானவர் நின்னால் அளிக்கத்தக்கவர். நின்னடிக்கண் மறத்தலில்லாத அன்பினர். அறிவில்லாத இவர் பிழையைப் பொறுத்தருள். பெரும!

நின்னடித் தொண்டாகிய இவர் ஆற்றிய பிழையினை மனம் கொள்ளேல். அழிந்துகிடக்கின்ற இன்னவர் அறிவு பெற்றெழும் வகை அருளுக' என்று இறைஞ்சிக் கூறினன்.

## 4. வீழ்ந்தெழும் அமரர்க்கு விஸ்வருபங் காட்டல்.

பொன்னவன் புகலக்கேட்டு முன்னவன் முறுவல் செய்து, வானவர் எவரும் எழும்வகை அருள்செய, எழுந்தயாவரும் உள்ளமதனில் மெய்யுணர்வு தோன்றுதலும், முன்னர் அறியாமற் செய்த பிழைக்குப் பலவாறு வருந்தி முருகேசன் அருளோடு விளையாடுவது கண்டு அவன் அடிகளில் முடிபட வணங்கி,

"கந்தநம ; வைந்துமுகர் தந்த முருகேசநம ; கங்கையுமைதன்
மைந்தநம ; பன்னிருபுயத்தநம ; நீபமலர் மாலைபுனையுந்
தந்தைநம ; வாறுமுகவாதிநம ; சோதிநம ; தற்பரமதா
மெந்தைநம ; வென்றுமிளையோய்நம ; குமாரநமவென்று
தொழுதார்."

தொழுதவர்கள் தலையன்புடன் எழுந்து புகழ்ந்து மனத்தி லச்சமுற்று மெய் நடுநடுங்கக் கண்ட குமரேசன், 'நீவிர் வருந்தலிர் நீவிர் வருந்தலிர்' எனக் கையமைத்து அருள் செய்திடலும், அவர்கள் பெருந்துயரும் அச்சமும் அகன்று, 'அமுதத்தினோடு நஞ்சினைக் கலந்துண்பவரை அந் நஞ்ச மல்லாமல் அமுதமோ உயிர் தொலைக்கும்? அதுபோல, இழுந்த திருவினை நின்னருளால் எய்திட இருந்த யாங்கள் நின்னோடு அமர் இயற்றியதனால், அன்ன தவறே எம் உயிரை நீக்கியது. நீ எம்மை முடித்திடியல்லை. நின்னைப் பகைமை கொண்டு பொருதேம்; அளப்பில் தீவினைகள் எம்மை வந்துற்றன. நீ எம்மிடை வைத்த தண்ணளியால் தண்டமியற்றி அவற்றைத் தொலைவு செய்தனை. ஆதலால், அடிகள் எமக்குச் செய்த அருளுக்கு எம்மால் ஆற்றுவதுதான் எதுளது? எம்மை அடியவராக ஈவதற் கெண்ணின், என்று நீ அன்று யாம் நினக் கடிமையாம். நினக்குப் புதிதாக அளிப்பது என்? அன்ன தெனினும் அறிவில்லாத ஏழையேம் செய்த பிழையனைத்தும் உள்ளத்

துன்னலே, பொறுத்தி' என்றிரப்ப, முருகவேள் அவற்றை யுணர்ந்து 'நம்மை நீர் ஒரு சேயென முன்னம் நினைந்து பொருதீர். நமது மொய்ம்பும் உயர்வும் இன்னும் நீவிர் உணரும்படி தெரித்தும்' என்றருளி,

"எண்டிசையு முருகன் மீரெழு திறத்துலகு மெண்கிரியு மேழு கடலுந்
தெண்டிரையு நேமிவரை யும்பிறவும் வேறுதிரி பாகி யுளசி
ரண்டநிரை யானவு மனைத்துயிரு மெப்பொருளு மாகி யயனும்
விண்டுமா னுஞ்செறிய வோருருவு கொண்டனன் விறற்கு மாரனே."

என்றவாறு பேருருக் கொண்டனன்.

குமரேசன் கொண்ட பெரும் பேருருவத்தை அமரர்க் கிறைவனும் ஏனையோரும், இது புதுமை! இது மிகப்புதுமை!! எனப் பெரிதும் வியந்து தொழுது, வான்மிசை நோக்கி, வடிவும் வனப்பும் முழுவதும் உணராராய், முழங்கா ளளவாக அரிதிற் கண்டு புகழ்ந்து, 'முதல்வ! எம்முன்னர் நீ கொண்ட பெருங் கோலந் தன்னை அடியேம் காணக் காட்டல் வேண்டும்' என விண்ணப்பஞ் செய்ய, அதனைக் கேட்ட எம் ஐயன், அவர்கட்கு ஒளிமிக்க கண்களை அருளி, அளவில் கோடி இளஞாயிறு போல ஒளிவீசி நின்ற தனது வடிவினை முற்றுங்காட்ட, இந்திரன் முதலாய இமையவ ரெல்லாம், அடிமுதல் முடியின்காறும் அறுமுகன் உருவ முழுவதையும் அவனருளால் நோக்கி, அளவிலா அண்டங்களும் முடிவறு முயிர்களும் மூவரும் தேவர் யாவரும் அதில் இருப்பக்கண்டு வணங்கிப் பராவி, எம்பெருமான்! அம்புவி முதலாம் அண்டமும், அங்கங்குள்ள உம்பரும், உயிரும் உயிரிலாப் பொருளும் மாலும் அயனும், சிவனொடு செறிதல் கண்டேம். ஆதலால், அம்மம்ம நின் திருமேனியோ எல்லாம் இருத்தற்கிடம்!

எல்லாம் நீயேயாகி இருக்குந் தன்மையை இன்றளவும் கண்டிலேம் நீ உணர்த்த உணர்ந்தேம். நின் தோற்றத்தினை யாமோ தெரிந்திட வல்லேம்.

" அறிகில மிந்நாள் காறு மகிலமு நீயே யாகி
யுறைதரு தன்மை நீவந் துணர்த்தலி னுணர்ந்தா மன்றே
பிறிவொரு பொருளுங் காணேம் பெருமநின் வடிவ மன்றிச்
சிறியம்யா முனது தோற்றந் தெரிந்திட வல்ல மோதான்."

'எந்தாய்! நின் உருவம் எல்லையில்லாத ஒளிபெற்றுள்ளது. அதனைக் கண்ட எமது கண்கள் ஒளி யிழந்தன. அன்றியும் நின் பேருரு நோக்கி அஞ்சுகின்றேம். அடியேம் உய்ந்திட நினது தொல்லுருக் கொண்டருளல் வேண்டும்' என்று வேண்ட, எம்பிரானும், அண்டமூடுருவிய தன்னுரு நீத்து அறுமுகத் தொருவனாகித் தோன்ற, அமரர்கோன் தொழுதுவணங்கி, 'அண்ணலே! உலகும் உயிரும் பிறவும் நின்னால் முறைபிறழ்ந்தன; அவற்றை முன்போல நிறுவியருளாய்', என, அறுமுகன் நகைத்தருளி, 'இவ்வண்டத்தில் எம்மால் வேறுற்றன வெல்லாம் முன்னிருந்த வண்ணமாகுக' என்று மொழிந்த அளவில், அவைகள் யாவும் முன்னுறு பெற்றியின் மேவிட, எவரும் நோக்கி இறும்பூதெய்தினர்.

அதன்பின்னர், கந்தவேள் மேருவரையை நீங்கிக் கயிலைக் கருகிலுள்ளதொரு குன்றினைச் சார்ந்திட, அதனை யறிந்த வானவர்கோன் ஏனையரோடும் போந்து, அமரர் கம்மியனைக் கொண்டு ஆலயம் ஒன்று அங்ஙன் அமைவித்து, அதன் நாப்பண் அரியணைக்கண் அறுமுகக்கடவுளை எழுந்தருளச்செய்து, 'ஞானநாயக! நாங்கள் உனக்குத் தானை; நீ எங்கட்குத் தலைவன்' என்றுரைத்து மஞ்சனமாட்டிக், குமாரதந்திர விதிப்படி பூசனைபுரிந்து போற்ற, அன்னவர் பூசனைக் குவந்த அருள்வள்ளல், திருவுருக்கரந்து கயிலையை யடைந்து, வீரரும் பாரிடத்தலைவரும் சூழ வீற்றிருந்தருளினன்.

## 5. தகர்ப்பரி மாவைத் தான்மேற் கோடல்.

வெள்ளி வெற்பில் வேற்கரத்தண்ணல் வீற்றிருக்கையில். மறையோரும் முனிவரரும் சூழ்தர நாரதன் நிலவுலகில் ஓர் வேள்வியை நடாத்தினன். அப்பொழுது, 'மகத்தன்னில் நம் இனத்

னை நாளும் அடுகின்றூர்; இங்கு இவரை யான் அடுவன்' என்று மனமிசைந்த தீக்கடவுளின் ஊர்தியானது, ஊழிக்காற்றும் ஊழித் தீயும் இடியேறும் ஒருருவுகொண்டென்ன விரைவும் செந்நிற மும் ஆர்ப்பும் உடையதாய், மணித்தொகை களத்திடை அசைய, கிங்கிணியும் சிலம்பும் அடிமிசை ஆர்க்க மேலெழுதல் போல வேள்வித் தீயினின்றும் ஒரு வெள்ளாடு மேலெழுந்தது. அதைக் கண்டு வேள்விச்சாலையில் இருந்தவர் யாரும் அச்சமோடு இரிய லுற்றனர்.

ஓடியவரை, வானினும் மண்ணினும் பின்தொடர்ந்து தாக்கித் தரையும் வரையும் புழுதியிட ஓடித் திரிந்தது. எட்டுத்திசைக் கரியும் இரிந்தேங்கக் கிட்டித் தாக்கிடும். மதியின் ஊர்தியும் கதிரவன் தேரும் புரிந்திட முட்டும்.

இவ்வண்ணம் உயிர்க்கிறுதி செய்து சினத்துடன் அவ் யாடு உலவித்திரிகையில், முனிவரும் நாரதனும் வானவரும் முடுகி யோடிக் கயிலை புக்கனர். அப்பொழுது இலக்கத்தொன்பது வீரரொடு மேவி ஆறுமுக வண்ணல் ஆடல் செய்திருக்கக் கண்டு, 'இனி ஈசனிடம் நண்ணுகிலம்; குமரேசன் நம் துயர் நீக்க அன்போடு எதிர்வந்தான். இவன் இளைஞனைக் காணப்படினும் சிறுவனல்லன். அண்டர் பலரோடு வாசவனை வென்று உயிரை மாற்றி எழுவித்தான். எம் குறையை முடித்திடல் இவற்கு எளிது. ஆதலால் உற்றதை இவனொடு புகன்றிடுவோம்' என்று மனந்துணிந்து, கந்தன் திருமுன்னரேகி வணக்கம் புரிந்திட, 'நீவிர் மிகவும் நொந்தனிர், புகுந்தது யாது நவலுமின்' என்றனன் வள்ளல்.

'என்றும் இளையோய்! கேட்பாய்: ஒரு வேள்வியை வேட் டேம். அத்தீயிடை ஒரு தகர் எழுந்து எங்கள் குழுவினை அட வெண்ணித் தூரந்தது. அதன் கிளர்ச்சியை யாமெல்லாம் அறிந்து, வேள்விச்சாலையை விட்டோடி இவ்விடத் துற்றேம். அது சினத்துடன் துரந்து சிற்சிலரைத் தாக்கலுற்றது. அதனால், விண்ணினும் மண்ணினும் எண்ணிலாத உயிர்கள் மாய்ந்தன.

எவரும் அஞ்சி ஓடுவதற் கேதுவாகிய இதனை நஞ்சமென்றே கூறலாம். அது நீலநிறமுடையதன்றே யெனின், இது நீலநஞ்ச மன்று; சிவந்த விடமே ஆடாக வடிவுகொண்டு, யாவரும் ஓல மிடுமாறு எங்கும் உலவுற்றது. இதனை இன்னும் ஒரு நொடிப் பொழுதில் அடக்காதொழியின் உயிரெல்லாம் முடிவெய்தும். சீற்றத்துடன் உயிர்கட்கு இறுதிசெய்து உலவுகின்ற இவ்யாட்டி னது ஆற்றலை அடக்கி எமது அச்ச மகற்றி யாங்கள் தொடங்கிய வேள்வியையும் முடித்தருளல் வேண்டும்' எனப்போற்றி நின்ற போது, குமரவேள் அவர்களைப் பரிவுடன் நோக்கி, 'அஞ்சுதல் ஒழிமின்' என அங்கையமைத்துத் தன் பரிசனத்துள் வீரவாகு தேவரை அழைத்து, 'வேள்வியில் வந்து உயிர்களை வருத்தித்திரி யும் ஆடதனை விரைவிற் பற்றிக் கொணர்தி' என் றருளினன்.

அருளிய அப்பொழுதே வீரவாகு தேவர், கந்தன் மலர்ப் பதத்தினைச் சிந்தனைசெய்து வணங்கிக், கயிலையினீங்கி நிலத்தினும் நிலவரையினும் நாடிக் கண்டிலனாகி வானுலகிற் போம்போது, நான்முகன் நகர்க்கருகில் தகர் செல்லும் தன்மை கண்டு, கோடு களைப்பற்றி ஈர்த்துக் கொடுபோய்க் கயிலையை அணுகி எந்தைமுன் உய்த்து நிற்ப, முருகன், 'மாதவத்தீர்! யாடு எம்பால் மேவிற்று. நீவிர் இனி வருந்தாதேகித் தொடங்கிய வேள்வியை முடித்திர்' என மொழிந்தருளினன்.

குமாரப்புத்தேள் இவ்வாறு உரைப்பக் கேட்ட நாரதனை உள் ளிட்ட முனிவரர், 'இடுக்கணகற்றிய எந்தாய்! இவ் யாடு வேள் வியிற் றோன்றியதாகையால் மாசற்றதாகும். அடியேங்கள் உய்யுமாறு இதனை ஊர்தியாகக்கொண்டு ஊர்ந்திடல் வேண்டும்' எனக் குறையிரக்க, அறுமுகத்தொருவனும் நன்று என்றருளி அன்று தொட்டு அவ் யாட்டினை ஊர்தியாகக் கொண்டருளினன்.

---

# திருத்தக்கதேவர்.

திருவாளர், K. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், தஞ்சை.

காப்பியச்சுவை கனிந்தொழுகும் ஐம்பெருங் காப்பியங்களுட் சிறப்பால் முதன்மைவாய்ந்தது திருத்தக்கதேவரியற்றிய சீவக சிந்தாமணியாகும். இந்நூலுக்கு முதனூல் யாதென அறியக் கூடவில்லை யெனினும் இக்கதையினைக் கொண்ட வடமொழி நூற்கள் நான்குள: அவை சத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி, சீவந்தர நாடகம், சீவந்தரசம்பு என்பன. இந்நூற்களுக்கும் தேவரியற்றிய சீவகசிந்தாமணிக்கும் பலவேறுபாடுகளுண் டென்பது பல்லோரும் அறிந்ததே.

திருத்தக்கதேவரது காலத்தினை அறியவேண்டுவான் முயன் றோர்பலர், சீவகசரிதம் வடமொழியில் மகாபுராணத்திலுள்ளது, அது சினசேனாசாரியர் இயற்றிய பூருவபாகமும் குணபத்திரா சாரியார் இயற்றிய உத்தரபாகமும் என இருபகுதிகளையுடைத்து ; உத்தரபாகம் கி. பி. 898-ல் இராட்டிரகூட அகாலவருடன் காலத்தி லியற்றப்பெற்றது ; ஆதலால் திருத்தக்கதேவர் மகாபுராணக் கதையை அடியாகக்கொண்டு தமிழ்மொழியில் கி. பி. 899 இன் பின்னர்ச் சீவகசிந்தாமணியை இயற்றினரென்பர். இவர் இவ் வரலாற்றினை வடமொழி நூற்களினின்று கொண்டனரெனில் அவ்வடமொழி நூற்கு எம்மொழியின் வாலாறு முதலாமென அறி யோம். வடமொழியிற் சீவகன் கதையினைக் குறித்து நான்கு நூற் களிருக்க, இவைகளின்றும் தேவர் தம் நூற்கு எற்ற குறிப்பினை எடுத்தாளாமல் மகாபுராணத்தினின்று குறிப்புக்கள் எடுத்துள்ளா ரெனற்கு உள்ள பற்றுக்கோடாவன யாவை? ஒரோவழி இவரது

காலத்தை ஆராய முன்வந்தார், மகாபுராணத்தின் ஓர் பாகம் எழுதிய குணபத்திராசாரியர் காலம் எளிதில் அறியப்பட்டதால், ஏனைய வடமொழி நூற்களை ஓர்புறம் ஒதுக்கித் திருத்தக்கதேவர் காலம் கி. பி. 899-இன் பின்னிருத்தல் வேண்டுமென்றும், இவரது முதனூல் மகாபுராணம் என்றும் ஓர் ஒப்பற்ற முடிவிற்கு வந்தனரோ? இவ்வாறு யாம் கூறுவது தவறுடைத்தெனக் கூறின், ஏனைய வடமொழி நூற்களது காலந்தான் யாது? இவ்வரலாற்றிற்கு யாது முதனூலென்று ஐயந்திரிபற அறியக் கூடாதவரை, தேவரியற்றிய சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய நூற்களேபோன்று முதனூலெனக் கருதப்படல் வேண்டும்.

சீவகசிந்தாமணி ஓர் சமண சமயநூலென்பதும், சமண சமயம் சைவ சமயத்துடன் இடையறாது போர்புரிந்து சைவகுரவர்கள் காலத்தே புறம்காட்டி ஓடிற்றென்பதும் யாவருமறிந்தனவே. சமண சமயம் தமிழகத்தே நின்றுலவிய காலம் கி. பி. நான்காம் நூற்றாண்டுமுதல் எழாம் நூற்றாண்டுவரையிலுமென்பது சரித்திர நூலாராய்ச்சிவல்லார் கூறிப்போதுமுடிபு. சமண் மதந்தழுவிய வடுகக்கருநாடர் காலத்திற்குச் சிறிது முன்னர்ச் சமணமதம் மிகச்சிறிய நிலைமையினை அடைந்திருந்தது. அக் காலத்திற்றான் சீவகசிந்தாமணி நூல் முடிவுபெற்றியற்றப்பட்டதெனக் கூறின் ஒக்கும். சமண்மதந்தழுவிய வடுகக் கருநாடரது படைவலியினைத் தொலைத்துச் சைவ சமயத்தைத் தமிழகத்தே நிலைநாட்டினவர் மூர்த்திநாயனாரெனின், இந்நாயனார் காலத்திற்குப் [கி. பி. ஆறும் நூற்றாண்டு] பின்னர்ச் சீவகசிந்தாமணி நூல் இயற்றப்பெற்றதென்ற கொள்கை போதிய வலியினையுடையதன்று. இதனுனே சீவக சரிதத்தைக் கூறும் பல வடமொழிநூல்களுட் காலமெளிதில் அறியக்கூடிய ஓர் நூலினை மட்டும் எடுத்துக்கொண்டு, சீவக சிந்தாமணி சரிதம் அவ்வடமொழி நூலினின்றும் தொகுத்து எழுதப்பட்டுளதென்றும், மற்றும் சீவகசிந்தாமணி ஆசிரியரது காலம் கி. பி. 900-க்குப் பின்னதெனவும் கூறும் கொள்கை வலியிலாத சிறுமையுடையதெனப் புலனாதல் காண்க.

திருத்தக்கதேவரியற்றிய சீவகசிந்தாமணி என்னை தமிழ்க் காப்பியங்களைப் போன்ற ஓர் முதனூல். உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர், தேவரருளிச்செய்த செய்யுட்கள் இரண்டாயிரத் தெழுநூறென்றே கொள்க என்றதனால், மூவாயிரத்து நூற்று நாற்பத்தைந்து செய்யுட்களையுடைய சீவகசிந்தாமணியில் நானூற்று நாற்பத்தைந்து செய்யுட்கள் பின்னர் யாவராலோ இயற்றப்பெற்றுள்ளவென்பது ஈண்டுக் குறிக்கற்பாலது. இதனைக் குறித்தன்றே நச்சினார்க்கினியர் 'பின்னுள்ளோர் செய்த சிந்தாமணி முதலியனவாம்' என்றனர். ஈங்கு 'செய்த' என்பதற்கு 'முற்றச்செய்த' என்று பொருள்கோடல் சாலவும் பொருந்தும். இந் நானூற்று நாற்பத்தைந்து செய்யுட்களைச் சீவகக் காதையுடன் சேர்த்துத் தொகுப்பித்தார் ஒருவாறு புறநானூறு தொகுக்கப் பட்ட காலத்திற்குப் பிந்தியவரெனத் துணிவு கொள்ளலாம். இவரது 2907-அம் செய்யுள்

வாய்ப்படுங் கேடுமின்றும் வரிசையி னரிந்து நாளுங்
காய்த்த நெற்கவளந் தீற்றிற் களிறுதான் கழனிமேயின்
வாய்ப்படவின்றிப் பொன்றும் வல்லனாய் மன்னன் கொள்ளி
னீத்தநீர் ஞாலமெல்லா நிதிநின்று சுரக்குமன்றே'

இதனைப் பின்வரும் அறிவுடை நம்பியுழைச்சென்ற பிசிராந்தையார் பாடிய புறப்பாட்டினோடு ஒத்துநோக்குக.

காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தனெறி யறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்
யானைபுக்க புலம் போலத்
தானு முண்ணா னுலகமுங் கெடுமே. [புறம். 184.]

மற்றும் இவரது 2908-ம் செய்யுள்

'நெல்லுயிர் மாந்தர்க் கெல்லா நீருயி ரிரண்டுஞ் செப்பிற்
புல்லுயிர் புகைந்து பொங்கு முழங்கழ லிலங்கு வாட்கை
மல்லலங் களிற்று மாலை வெண்குடை மன்னர் கண்டாய்
நல்லுயிர் ஞாலந் தன்னு ளுமவே னம்பி யென்றான்.' என்ப

தனை மோசிகீரனர் பாடிய புறப்பாட்டுடன் ஒத்து நோக்குக. அது-

நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே. [புறம் 186]

இவர் தேவரைப்போன்று அரசியலைப்பற்றி யாவும் முற்றுமறிந்திலராதலின், கடைச் சங்க நூற்கள் சிறப்பித்துக் கூறும் அரசியல் முறைமையினைக் கற்று நன்குணர்ந்து இப்பாக்களைப் பின்னர் எழுதியிருக்கின்றனரெனக் கூறின் தவறாகாது. 'நாடக அரங்கு புகுந்து பலகோலம் பூண்டு ஆடுவோன் அக்கோலங்களாற் றன்னியல்பு சிறிதும் மாறாது தான் அவற்றின் வேறாயினாற்போல, இறைவனும் அன்பின் மிக்க அடியார்க்கு அருள் செய்தற் பொருட்டு அவரவர் நினைத்த உருவுகள் பலவும் எடுப்பானாயினும் அவற்றாற் றன்னியல்பு சிறிதும் பிறழப் பெறுவான் அல்ல' னென்ற எம் மதமும் சம்மதமெனும் கொள்கையுடன் தமிழகத்தே தனிச் செங்கோல் செலுத்தி மன்பதையினை இன்புற ஆண்ட சரிதகாலத்திற்கு முன்னருள்ள மன்னர் மன்னர்கள் [கரிகாற் சோழன் முதலாயினோர்] காலத்தில் திருத்தக்கதேவர் சிவக சிந்தாமணியினை அரைகுறையாக எழுதி யிருத்தல் வேண்டும். இஃது சமண சமய நூலாயிருத்தலைப்பற்றி நலியற்றப்பட்ட காலத்தில் இதனை யாவரும் போற்றவில்லை. எனெனில் அம்மன்னர்கள் காலத்தே சைவ சமயம் தழைத் தோங்கியது. புறநானூறு தொகுக்கப்பட்ட வெகு காலத்திற்குப் பின்னரும் தமிழகத்தே சமண் மதம் நிலவிய கி. பி. ஆறும் நூற்றாண்டிற்குச் சிறிது முன்னரும் சிவக சிந்தாமணி ஓர் முடிவு பெற்ற முதனூலாக்கருதப் பட்டுள்ளது.

பண்டைய காலத்துத்தமிழ் மன்னர்கள் சிறிதுகாலம் அரசாண்டு பின்னர்த் துறவியாக மாறுவதும், வடக்கிருப்பதும் பண்டைய வழக்கு. அவ்வாறே தேவர் மறுமையினைக் கருதிச் சிறிதுகாலம் வரை தக்க நாட்டில் செங்கோலோச்சிப் பின்னர்ச் சமணமதக் கொள்கையினை யுடையவராய்த் துறவு பூண்டனர்.

'தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன
வோங்குகுல நையவத னுட்பிறந்த வீரர்
தாங்கல்கட னாகுந் தலை சாய்க்கவரு தீச்சொ
னீங்கன்மட வார்கள் கடன்' [498.]

எனக்கூறிய தேவர் சிறுபிராயத்தே தங்குலத்தைத் தாங்காது தவிக்கச் செய்து துறவியாவரோ!

இளமையிற்றுறந்தோர்க்கு அரசாட்சியின் மாட்சியும் அரச சூழ்ச்சி முதலானவையும் முற்றும் அறிய வழியு மில்லை. எதுக்களுமில்லை. தேவர் தக்கநாட்டையாண்ட அரசனாதலின் அரசியலின் தன்மையினை நன்கு தெரிந்து அரசியலைப்பற்றிப் பின் வருமாறு கூறுவாராயினர்.

நீதி யாலறுத் தந்நிதி யீட்டுத
லாதியாய வரும் பகை நாட்டுதன்
மோதி முள்ளொடு முட்பகை கண்டிடல்
பேதுசெய்து பிளந்திடல் பெட்டதே [1920.]

ஒற்றர் தங்களை யொற்றரி னாய்தலுங்
கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலுஞ்
சுற்றஞ் சூழ்ந்து பெருக்கலுஞ் சூதரோ
கொற்றங் கொள்குறிக் கொற்றவற் கென்பவே. [1921.]

தேவர் 'நோற்றிட்டடங்கலாண்மைக் கழகு' எனத் 'தாய மெல்லாம் பெறுதகு புதல்வர்க்கீந்து,' அருகதேவனை

Roll - 126
1281 - 2385
1 - 106



'தெருள லென்செய்தநினி னையெனு
மிருள்வி லங்கநின் றெரியு நீள்சுட
ரருளுமின்—'

எனவேண்டித் 'துறந்துபோய்க் கடவுளானார்.'

சச்சந்தன் காமவின்பத்தால் அரசர்க்குரிய எல்லாச் சிறப்புக்களையும் கட்டியங்காரனுக்குக் கொடுத்துவிட, அம்மன்னனுக்கு அறிவு கொளுத்தவந்த அமைச்சர்களாம் நிமித்திகன், உருத்திரதத்தன் யாவரென்போமாயின், அவர்கள் நம்தேவரே. அச்சணந்தி ஆசிரியர் சிவகனுக்குத் தம்முடைய பிறப்பினையும் வரலாற்றினையும் கூறுவதே போன்று நமக்கும் தம்முடைய வரலாற்றினைத் தேவரே கூறுகின்றனர். அச்சணந்தியும் நம்தேவரே. ஒரோவழி இவரும் யானைத்தியினால் பிடிக்கப்பெற்று ஓர் சமணத் துறவியின் உதவியால் அந்நோய் நீக்கப்பெற்றுப் பின்னர் அரசாளும் தகைமையினையும் விட்டுச் சமண மதத்தினைத் தழுவியிருக்கலாம்.

துறவறமடைந்தாரையும் இல்லறத்தே புகுத்திவிடும் நீரதாகவுடைய காமம், காமமாலை, காமநுகர்ச்சி, காமவின்பம், காமன்சேனை முதலியவைகளைப்பற்றித் தேவர் கூறுவதை நாம் அறிவோமாயின் தேவர் இளமையிற்றுறந்தவரல்லரெனத் துணிவுபெறக் கூறலாம். காமவின்ப மென்பது யாதென அறியாத ஒருவருக்கு அவ்வின்பத்தின் பெருமையும், அதனால் வரும் தீதும் எடுத்துரைப்பது அவ்வின்ப நெறியில் ஈடுபடாதவர்களுக்கியலாது.

இதுகாறுங் கூறிய வாற்றால் தேவர் தக்க நாடுடையவள்ளலென்பதும், சிவக சிந்தாமணி முற்றுப்பெற்ற முதனூலாகக் கருதி யிருந்தகாலம் கி. பி. ஆறும் நூற்றாண்டிற்கு முன்னரென்பதும் அறியப்பெற்றாம்.

---